# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 05 அதிர்வு 57 பங்குனி 2022 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Transco CARGO

இனிய புது வருட வாழ்த்துக்கள்!


புதுவருட அட்டவணை

| CUT OFF | SL ARRIVAL |
|---|---|
| MAR 05 | APR 12 |
| MAR 12 | APR 19 |
| MAR 19 | APR 26 |
| MAR 26 | MAY 03 |
| APR 02 | MAY 10 |
| APR 09 | MAY 25 |
| APR 23 | JUN 01 |
| APR 30 | JUN 08 |
| MAY 07 | JUN 14 |

*Only Available at Transco Offices

CAMPBELLFIELD - (03) 9357 7228 | DANDENONG - (03) 9703 2255

1300 187 267 | TRANSCOCARGO.COM.AU



we make a special for you

Wedding Deco
Traditional wedding Deco
Engagement Deco
Puberty Ceremony Deco
Birthday Deco
Baby Shower Deco
and ets...

RK ROYAL EVENTS & DECORE

நீங்கள் விரும்பும் வடிவில் தருகிறோம்

திருமண அலங்காரம்
பாரம்பரிய திருமண அலங்காரம்
நிச்சயதார்த்த அலங்காரம்
பூப்புனித நீராட்டு விழா அலங்காரம்
பிறந்தநாள் அலங்காரம்
வளைகாப்பு அலங்காரம்
மற்றும் பல...

OUR SERVICE STATE
Victoria
Canberra

RATHEESH P
Event Coordinator and ets....
0452 428321
03 97002687
rkroyalevents@gmail.com
RKroyalevents&decore



EZY CASH PAWN SHOP
அடகுகடை

EZY CASH

DANDENONG

நகை அடகுச்சேவை

Maximum Value | Quick Service | Lowest Rate

Bala 0420 877 303

GOLD LOAN
Need some Emergency Fund
Don't worry we have got you covered!



ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


ISODIA TAX
ACCOUNTING AND TAX
QUALIFIED TAX AGENTS
TAX PRACTITIONERS BOARD REGISTERED
CHARTERED ACCOUNTANTS AUSTRALIA + NEW ZEALAND
வரி கணக்கை தாக்கல் செய்ய
$99
மட்டுமே
எங்கள் சேவைகள்
வருமான வரி தாக்கல்
வணிக வரி (BAS) தாக்கல்
வணிக எண்ணை (ABN) அமைத்தல்
சுயமாக நிர்வகிக்கப்படும் வருங்கால கருணைத்தொகை உதவி
(Setting up Self Managed Super Funds)
மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் !
03 8772 2557 | 0421 279 530 (DAN)
isodia.tax@gmail.com
THE HUB ARCADE, SUITE 4 SHOP 7 / 131 – 147 Walker St, Dandenong VIC 3175


PRAKAHS
GOLD BUYERS
தங்கம் ஈடு
வைக்கும் நிலையம்
உங்கள் அவசரப்பணத்தேவைக்கு உடனடித் தீர்வு!
வட்டி விகிதம் 3%
தங்கம் வாங்கும் இடம்
டனிஸ்டன் 0421 279 530
127 Walker St, Dandenong, VIC-3175.
prakahsgold@gmail.com
www.prakahsgold.com
/PrakahsGold
MON- SAT 10 AM - 5:30 PM
CLOSED SUNDAYS AND PUBLIC HOLIDAYS

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



**ஆஸி பூர்வ குடியினரின் முகமாக உலகெங்கிலும் அறியப் படுபவர் குல்பிலில். ஆஸ்திரேலியாவின் வடகோடியில் உள்ள பூர்வகுடி பகுதியான ஆர்நம் நாட்டில் பிறந்தவர். தன் பதின்பருவம் வரை மரபான பூர்வகுடி வாழ்க்கை வாழ்ந்து வந்தவர். குல்பிலில் என்பது அவரின் குலக்குறியான மீன்கொத்திப் பறவையை குறிக்கும் சொல். அவரின் பெற்றோர்கள் மரணத்திற்குப் பின் ஒரு கிருஸ்துவ பள்ளியில் அவர் சேர்க்கப்பட்டபோதே அவருக்கு டேவிட் என்னும் பெயர் வழங்கப்படுகிறது.**



# மண்ணின் மைந்தன் டேவிட் குல்பிலில்



கார்த்திக்வேலு

ஒரு இடத்திலோ நாட்டிலோ வாழ்வது என்பது வேறு. ஆனால் ஒரு மண்ணை உணர்வுபூர்வமாக தனது அடையாளமாக காண்பது வேறு. அந்த உணர்வு நிலத்தை ஒரு ஜீவனாகவும், போஷிக்கும் அன்னையாகவும், தனது மூதாதைக-ளோடு கொண்ட உறவாகவும் காணும் நிலையில் கிளைப்பது. அப்படியான ஒரு மனிதனின் உணவும், உறவும், அறிவும், ஞானமும் அந்த நிலத்தில் இருந்தே நேரடியாக பெற்ற ஒன்றாக இருக்கும் . அவனுக்கு நிலம் என்பது அவனது அகத்தில் வாழும் கனவு. அப்படியானவனே மண்ணுக்கு மைந்தனாகிறான் .

சமீபத்தில் மறைந்த பிரபல ஆஸி நடி-கரும், ஆஸ்திரேலிய பூர்வகுடியினருமான டேவிட் குல்பிலில் அப்படி அழைக்கப்பட எல்லா தகுதியும் கொண்டவர் என்றே சொல்லலாம் . ஆஸி பூர்வ குடியினரின் முகமாக உலகெங்கிலும் அறியப்படுபவர் குல்பிலில் . ஆஸ்திரேலியாவின் வடகோடியில் உள்ள பூர்வகுடி பகுதியான ஆர்நம் நாட்டில் பிறந்தவர். தன் பதின்மபருவம் வரை மரபான பூர்வகுடி வாழ்க்வை வாழ்ந்து வந்தவர். குல்பிலில் என்பது அவரின் குலக்குறியான மீன்கொத்திப் பறவையை குறிக்கும் சொல். அவரின் பெற்றோர்கள் மரணத்திற்குப் பின் ஒரு கிருஸ்துவ பள்ளியில் அவர் சேர்க்கப்பட்டபோதே அவருக்கு டேவிட் என்னும் பெயர் வழங்கப்படுகிறது.

1971 இல் குல்பிலிலின் பூர்வகுடி நடனத்தை பார்த்த பிரிட்டிஷ் இயக்குநர் ஒருவர் அவரை தனது படத்தில் நடிக்க வைக்க முடிவு செய்கிறார் . எட்டு வயதுவரை ஒரு வெள்ளை மனிதனையே பார்த்திராத குல்பிலில் 16 வயதில் ஒரு சர்வதேச ஆங்கில படத்தில் நடித்து உலகெங்கும் அறியப்படும் ஆளுமையாகிறார் . இந்த வரவு பல வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது . குல்பிலில் சினிமா படங்களில் நடிக்கும் வரை பூர்வகுடி பாத்திரம் என்றால் பொதுவாக அதை முகத்தை கருமையாக்கிகோண்ட வெள்ளை இனத்தவர் ஒருவரே நடித்திருப்பார் .இப்படி அவர் நடித்து பிரபலமான படமான Walkabout திரைப்படம் பல நாடுகளில் திரையிடப்பட்டது.

இந்த திடீர் வெளிச்சம் அவரை ஆர்நம் நாட்டின் சிறு பூர்வகுடி வாழ்க்கையில் இருந்து சடுதியிலே சர்வதேச அரங்கில் நிறுத்தி அழகு பார்த்தது .எந்த ராணியின் பெயரால் ஒட்டு மொத்த ஆஸ்திரேலியாவின் நிலமும் கையகப்படுத்தப்பட்டதோ அதே நாட்டின் ராணியுடன் சமமாக அமர்ந்து உணவருந்தும் வாய்ப்பை பெற்றார் முகமது அலி, புரூஸ் லீ, பாம் மார்லி, ஜிம்மி ஹெண்ரிகஸ் என்று அந்த காலகட்ட நட்சத்திரங்கள் பலருடன் பழகியவர் . அதன் பின்னர் அவர் நடித்த Tracker Rabbit proof fence, Ten Canoes, Charlie's country உட்பட பூர்வ குடியினரை முக்கிய கதாபாத்திரமாக கொண்ட பல படங்கள் அவரை ஆஸ்திரேலிய பூர்வகுடிகளின் முக்கிய முகமாக நிலை நிறுத்தியது.

ஒருமுறை பூர்வகுடி சமூகத்தில் பிறந்து வளர்ந்த நீங்கள் எப்படி நடிப்பு கற்றீர்கள் என்ற கேள்விக்கு, இப்படி பதில் சொல்லியிருந்தார் “நான் நடிப்பதில்லை அப்படியே குதித்து கேமரா முன் நிற்கிறேன் , கேமரா என்னை பார்க்கிறது அவ்வளவுதான் “.உல-கில் பலர் பார்க்க நேர்ந்த முதல் ஆஸி பூர்வகுடி இவராகத்தான் இருந்திருப்பார் . அது இவராக இருந்தது ஒரு நல் ஊழ் என்று தான் சொல்ல வேண்டும். குல்பிலில் ஒரு சுயம்பு , யாரும் கற்றுத்தராமல், எதையும் பார்த்து செய்யாமல், தன்னுள் ஊறிய ஜீவனை எந்த அலங்காரங்களும் இன்றி நேரடியாக வெளிப்படுத்தியவர்.

ஆங்கிலேய குடியேற்றத்துக்கு முன் ஆஸியில் பூர்வகுடிகள் பல்வேறு குழுக்களாய் தேசங்களாய் வாழ்ந்து வந்தார்கள், ஒரு காலத்தில் மொத்தம் 250 க்கும் மேற்பட்ட தனி நாடுகளாய் பரவியிருந்தார்கள் . அவரவர் மொழி , அவரவர் பழக்க வழக்கங்கள். இன்றும் கூட சில இடங்களில் அவர்கள் மரபான வாழ்க்கை முறையை பின்பற்றியே குழுக்களாக வாழ்ந்து வருகிறார்கள். ஆஸியில் குடியேறிய ஐரோப்பியர்களுக்கும் பூர்வ குடிகளுக்குமான உறவு இன்றுமே கூட பரிதாபகரமாக பிளவுற்றிருக்கிறது. இந்த இரு சமூகங்களுமே முற்றிலும் வெவ்வேறு பண்பாட்டு நிலைகள், வெவ்வேறு நம்பிக்கைகள், வெவ்வேறு உலகங்களை சார்ந்தவை. எதிரெ-திர் திசை நோக்கி அமர்ந்திருக்கும் கற்சிலைகள் . குல்பிலில் இயற்கையான நுண்ணுணர்வு அமைந்தவர், திரையில் பாத்திரங்களை நுட்பமாக வெளிப்படுத்தியவர். சினிமாவில் வந்த புகழும் வெளிச்சமும் அவரின் சொந்த நிலமான ஆர்நம் நாட்டிலிருந்து பெரும் நகரம் நோக்கி அவரை குடிபெயர வைத்தது. பல வாய்ப்புகள் வந்தும் தனது மண்ணுக்கு வெளியே சென்று படங்களில் நடிக்க மறுத்தவர். தனது மக்களின் வாழ்க்கையை திரையில் உண்மையாக பிரதிபலிப்பதே தனது குறிக்கோள் என்று சொன்னவர்.

**மிகவும் நோயுற்றிருந்த தருணம் ஒன்றில் அவருக்கு தன் நாட்டில் கிடைக்கும் ஒருவகை நண்டு சாப்பிட வேண்டும் என்று ஏக்கம் தோன்றியது. அதை அறிந்த நண்பர்கள் சிலர் உடனே அதை தேடிப் பிடித்து அவர் தற்போது வாழும் அடிலெய்டு நகரத்துக்கு அனுப்பி வைத்தனர். இறுதிவரை அவரால் தன் சொந்த நிலத்துக்கு, தன் பூர்வகுடி வாழ்க்கைக்கு போக முடியவில்லை அதே சமயம் நவீன ஆஸி வாழ்விலும் ஒன்றி இருக்க முடியவில்லை. அவரின் இந்த தொங்கல் வாழ்க்கை ஒருவகையில் மொத்த ஆஸி பூர்வகுடியினரின் வாழ்க்கையின் அந்தரங்க பிரதிபலிப்பு தான்.**

அவருக்கு தனது இறுதிகாலத்தில் தன் பிறந்த இடத்துக்கு திரும்ப போக வேண்டும் என்று எண்ணம் திரும்பத் திரும்ப அவர் மனதில் தோன்றியபடியிருந்தது.

கடந்த பல வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவரால் நெடுந்தொலைவு பயணம் செய்ய இயலவில்லை. குல்பிலீல் விமானப் பயணத்தையும் விரும்பியவர் அல்ல. ஒவ்வொரு ஊடக பேட்டியின்போதும் தவறாமல் தன் சொந்த நிலத்துக்கு போக வேண்டும் வேட்டையாட வேண்டும், மீன் பிடிக்க வேண்டும் என்ற ஆசையை சொல்லிக் கொண்டே இருப்பார்.

மிகவும் நோயுற்றிருந்த தருணம் ஒன்றில் அவருக்கு தன் நாட்டில் கிடைக்கும் ஒருவகை நண்டு சாப்பிட வேண்டும் என்று ஏக்கம் தோன்றியது. அதை அறிந்த நண்பர்கள் சிலர் உடனே அதை தேடிப் பிடித்து அவர் தற்போது வாழும் அடிலெய்டு நகரத்துக்கு அனுப்பி வைத்தனர். இறுதிவரை அவரால் தன் சொந்த நிலத்துக்கு, தன் பூர்வகுடி வாழ்க்கைக்கு போக முடியவில்லை அதே சமயம் நவீன ஆஸி வாழ்விலும் ஒன்றி இருக்க முடியவில்லை. அவரின் இந்த தொங்கல் வாழ்க்கை ஒரு-வகையில் மொத்த ஆஸி பூர்வகுடியினரின் வாழ்க்கையின் அந்தரங்க பிரதிபலிப்பு தான்.

இந்த உள்ளார்ந்த அலைக்கழிப்பு அவரை மது பழக்கத்துக்கு இட்டுச்சென்றது . அந்த காலகட்டத்தை அவரின் இருண்ட காலம் என்று சொல்லலாம். ஆனால் எப்படியே அதிலிருந்தும் மீண்டு வந்தார், அதன் பிறகும் படங்களில் நடித்தார். தனது மது பழக்கம் குறித்து அவர் என்றும் மறைத்ததோ , குற்ற உணர்வு கொண்டதோ இல்லை. அவரின் இந்த நிமிர்வு இறுதிவரை அவரிடம் இருந்தது, தான் யார் என்று முழுமையாக உணர்நதால் வரும் நிமிர்வு அது. பல படங்களில் அவர் வெளிப்படுத்தும் நுட்பமான பகடி தனது இடம் குறித்தும் தனது நிலத்தின் நிலை குறித்தும் கொண்ட ஆழமான புரிதலால் வருவது.

அவர் மறைவு எனக்கும் விளக்க முடியாத வருத்தத்தை அளித்தது. தனது சொந்த மண்ணில் ஒரு அகதியைப் போல எதிலும் ஒட்ட முடியாமல் வாழும் வாழ்க்கையின் தனிமை குரூரமானது . ஆஸி பூர்வகுடிகளின் நம்பிக்கையின் படி மரணம் என்பது ஒருவரை வேறொரு வாழ்க்கைக்கு இட்டுச்செல்லும், டேவிட் அவராகவே எங்கோ இருந்துகொண்டிருப்பார் என்று எண்ணிக்கொள்கிறேன்.

ஆஸ்திரேலியாவின் தேசிய அடையாளம் என்று நாம் பல விஷயங்களை சுட்டலாம் , உணவு , மிருகங்களை , ஆளுமைகள் , அரசியல் தலைவர்கள், பெரும் நட்சத்திரங்கள் என்று. அவர்கள் அனைவருக்குமே ஆஸ்திரேலியா என்பது ஒரு வசிப்பிடம் தான், அவர்கள் கட்டமைத்த அடையாளம் என்பது ஆனால் ஆஸ்திரேலியாவின் ஆன்மாவை பிரதிபலித்தவர் என்றால் அது டேவிட் குல்பிலீல் எனலாம்.

குல்பிலீல் இரண்டு முற்றிலும் வேறுபட்ட உலகங்களை இணைத்தவர். ஒருபுறம் பல்லாயிரம் ஆண்டுகாலம் இந்த நிலத்தை சார்ந்து ஒரு பூர்வகுடி வாழ்க்கை முறையும், கனவும், நம்பிக்கைகளும் - அந்த வாழ்க்கை முறைக்கே உரிய மெய்யியலும் கொண்ட ஒரு உலகம். மற்றொருபுறம் நுகர்வுகலாச்சாரமும் முதலாளித்துவ அமைப்பும் உருவாக்கிய மேற்கத்திய வாழ்க்கைமுறையின் உச்சமான நவீன உலகம் . இவ்விரண்டு உலகங்களுக்கும் இடையே ஒரு நெசவைப் போல முன்னும் பின்னும் சென்று வந்தவர். எளிமையில் இருந்து அதீதங்களுக்கும், அமைதியில் இருந்து ஆரவாரத்திற்கும். ஒரு பட்டு நூலை கொண்டு இந்த இரு உலகங்களையும் இணைத்தவர் . அப்படி அவர் பின்ணிய ஆடை தான் இன்று பூர்வகுடிகளின் அடையாளமாகவும் அவர்களின் தவிப்பின் அடையாளமாகவும் நமக்கு முன் நிற்கிறது . இந்த மண்ணின் மைந்தன் குல்பிலில்.


SRI KUMARAN®
our local store
GRAND
OPENING
SOON
INDIAN & SRI LANKAN GROCER
GROCERY | FRUITS & VEG | MEAT & SEA FOOD | CAFE
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
0413 306 575
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

குரல்:05 அதிர்வு: 57 பங்குனி 2022 தொ.பே:1800 960 162

# மாற வேண்டியது அகதிகள் அல்ல, அரசின் கொள்கையே...!

அகதிகள் எனப்படுவோர் தாமாக உருவாவதில்லை. அவர்கள் உருவாக்கப்படுகின்றனர். அதிகார வர்க்கத்தின் ஆயுதப்பசிக்கு இரையாகாது, தமது உறவுகள், உடமைகள் என அத்தனையையும் இழந்துவிட்டு, உயிரை மட்டும் கையில் பிடித்துக்கொண்டு – நடமாடும் பிணமாக நகரும் அவர்களின் வாழ்க்கையென்பது வலி சுமந்தது. மறுவாழ்வு கிடைத்தால்கூட அந்த வடு மாறாது. வாழ்நாள் முழுதும் ஏதோவொரு விதத்தில் வலித்துகொண்டுதான் இருக்கும்.

தாம் பிறந்து – தவழ்ந்து – வளர்ந்து – வாழ்ந்து – சுகம் அனுபவித்த பூர்வீக மண்ணைவிட்டு வெளியேறுவதென்பது, மரங்களை வேரோடு பிடுங்கியெடுத்து – தன் வளம் சாராத நிலத்தில் மீண்டும் நடுவதற்கு ஒப்பானதாகும். எனவே, அகதிகளின் வாழ்க்கையை, வலிகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் விவரித்து விடமுடியாது. இன்னமும்கூட அடையாளத்தை தொலைத்து – அத்திவாரம்கூட இன்றி – அவல வாழ்க்கை வாழும் அகதிகளின் எண்ணிக்கை ஏராளம்.

இப்படியான சூழ்நிலையில் கடந்த தசாப்தத்தில் ஆஸ்திரேலிய நிலப்பரப்புக்குள் அகதிகளாக வந்த பல நாட்டு மக்கள், இன்னும் தமது இருப்பை தக்கவைத்துக்கொள்ள முடியாமல் – ஆணிவேரை சரிவர நிலைப்படுத்த முடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

இற்றைக்கு பத்து வருடங்களுக்க முன்னர் ஆஸ்திரேலியா நோக்கி வந்த அகதிப்படகுகளின் எண்ணிக்கை ஆஸ்திரேலிய அரசியலில் பெரும் மாற்றத்தையே உருவாக்கி விட்டு சென்றது. அதன் தாக்கம் இன்றளவிலும் எதிரொலித்துகொண்டுதான் இருக்கின்றது. தேர்தல் காலங்களில் அவை பரப்புரைக் களத்திலும் ஓங்கி ஒலிக்கும். உறுதிமொழிகளும் வாரி வழங்கப்படும்.

குறிப்பாக ஆப்கானிஸ்தானை தலிபான்கள், கைப்பற்றி 5 மாதங்கள் கடந்த நிலையில், நீண்ட காலமாக எதிர்ப்பார்த்து வந்த ஆப்கான் அகதிகள் மீள்குடியமர்த்தல் தொடர்பான அறிவிப்பை ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் அலெக்ஸ் ஹாக் 2022 ஜனவரியில் வெளியிட்டார்.

இந்த அறிவிப்பின் பிரகாரம் ஏற்கனவே உள்ள புலம்பெயர்வு ஒதுக்கீட்டின் கீழ் அடுத்த 4 ஆண்டுகளில் ஆப்கான் அகதிகளென 15,000 பேர் உள்வாங்கப்படுவார்கள். அதில் 10 ஆயிரம் இடங்கள் மனிதாபிமான உதவியை எதிர்ப்பார்த்திருக்கும் ஆப்கானியர்களுக்கானவை. ஏனைய 5,000 இடங்கள், ஆஸ்திரேலியாவில் உள்ள ஆப்கானியர்களின் குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் இணைவதற்கானது.

ஏற்கனவே உள்ள புலம்பெயர்வுக்கான ஒதுக்கீட்டின் கீழ் இந்த இடங்கள் ஒதுக்கப்பட்டதால், அது மனிதாபிமான உதவியை எதிர்பார்த்திருக்கும் பிற நாட்டவர்களுக்கான வாய்ப்பினை குறைக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, கடந்த காலங்களில் சிரியா, ஈராக் நாட்டு அகதிகளுக்கு அறிவிக்கப்பட்டது போல, ஆப்கான் அகதிகளுக்கு என சிறப்பு புலம்பெயர்வு திட்டத்தை ஆஸ்திரேலிய அரசு அறிவிக்க வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

தற்போது உக்ரைனில் நிகழும் போர் காரணமாக வெளியேறும் ஆயிரக்கணக்கானோருக்கு அத்தனை உதவிகளையும் ஆஸ்திரேலிய அரசு செய்ய வேண்டும் என ஆஸ்திரேலியாவின் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் உக்ரைனியர்களின் விசா விண்ணப்பங்களின் பரிசீலனை ஏற்கனவே துரிதப்படுத்தப்பட்டுள்ளது என ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் அறிவிப்பு விடுத்துள்ளார். ஆஸ்திரேலியாவின் வருடாந்த மனிதாபிமான ஒதுக்கீட்டுக்கு அப்பால் சிறப்புத் திட்டத்தின் மூலம் உக்ரைனிய அகதிகளை உள்வாங்க உள்ளனர் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த உறுதிமொழி நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகமும் உள்ளது. எது எப்படியோ லிபரல் அரசால் வழங்கப்படும் இவ்வாறான வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது நல்லவிடயமே. நாமும் வாழ்த்தி வரவேற்கலாம்.

அதேவேளை, ஆஸ்திரேலியாவிலுள்ள ஆப்கான் அகதிகளுக்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தி கன்பராவிலுள்ள நாடாளுமன்றம் முன்பாக அண்மையில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில், நாடு முழுவதிலிருந்தும் வந்த ஆப்கான் அகதிகள் மற்றும் புகலிடக்கோரிக்கையாளர்கள், அகதிகள் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். “ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பி ஆஸ்திரேலியா வந்த அகதிகளுக்கு, நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படவேண்டும்.” – என போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர். இவர்களை போன்றே இலங்கை அகதிகளும் உள்ளனர். ஆனாலும் அவர்கள் எவரும் இவ்வாறான கவனயீர்ப்பு போராட்டங்களில் பங்கெடுப்பதில்லை.

ஆஸ்திரேலியாவில் சமூகத்துடன் இணைக்கப்பட்ட அகதிகள் ஒரு புறத்தே தங்களது குடும்பங்களோடு இணைய முடியாது திண்டாடி வருகின்றனர். மறுபுறத்தே நீண்ட காலமாக ஆஸி. அரசால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் தங்களது விடுதலைக்காக போராடிக்கொண்டே இருக்கின்றனர்.

இவ்வாறு ஆஸ்திரேலியா, அகதிகள் விடயத்தில் கையாளும் முறைமை தொடர்பில் மனித உரிமை கண்காணிப்பகம் கடும் விசனத்தை வெளியிட்டு, அண்மையில் அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தது. லிபரல் அரசின் தேர்தல் கால ஆயுதங்களில் ‘அகதிகள்’ விவகாரமும் ஒன்று.. எனவே, அந்த விடயத்தை எப்போதும் கொதிநிலையில் வைத்திருக்க வேண்டிய ‘அரசியல் தேவை’ அக்கட்சியினருக்கு இருக்கக்கூடும். இந்நிலைமை மாற வேண்டும்.

‘மனிதாபிமான நாடு’ என்பதை சொல்லி அல்ல செயலில்தான் காட்ட வேண்டும்.

# ஒரு நாள் கூத்து வேண்டாம்! வாழ்நாள் முழுதும் பெண்களை போற்றுவோம்!!



சுமதி விஜயகுமார்

உலக நாடுகளில் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆண்டுதோறும் இதற்கான நிகழ்வுகளும் இடம் பெறுகின்றன. மகளிர் தினம் கொண்டாடப்படவேண்டியதா, இல்லையா என்பது தான் இங்கு எழும் கேள்வி.

1908 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பெண்களுக்கான உரிமைகளை கோரி சுமார் 15 ஆயிரம் பெண்கள் போராட்டம் நடத்தினர். போராட்டம் நடத்தப்பட்ட அடுத்த ஆண்டே அமெரிக்காவில் மார்ச் 8 ஆம் திகதி மகளிர் தினமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் 1975 ஆம் ஆண்டே ஐ.நா, சர்வதேச பெண்கள் தினமாக அறிவித்தது.

பல பெண்களின் வலிகளால் உருவாக்கப்பட்ட மகளிர் தினம், கொண்டாட்ட தினமாக மாற்றமடைந்தன் ஊடாக மகளிர்களுக்கான உரிமைகள் கிடைக்கப் பெற்றுவிட்டனவா? மாறாக ஆஸ்திரேலியா என்னும் பெரும் தேசத்தில் மகளிர்க்கான உரிமைகள் அனைத்தும் உள்ள நாடுதானே இங்கு கொண்டாடுவதில் என்ன தவறு என்ற கேள்விகள் உள்ளனவே.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் நாம் சார்ந்துள்ள சமூகக்கட்டமைபில், எனக்கு ஜீன்ஸ் ட்ஷிர்ட் அணிய பிடிக்கும். என் தோழிக்கு புடவை அணிய பிடிக்கும். தோள் அளவு கத்தரித்த தலைமுடி தான் என் அடையாளம். என் தோழிக்கு இடுப்பளவு முடி இருக்கும். குறைந்தபட்ச அணிகலன்கள் அணிவது தான் என் விருப்பம். அவளோ நெற்றி பொட்டில் இருந்து காலில் மெட்டி வரை அனைத்தும் அணிந்து கொள்வாள். இப்போது யார் அதிக சுதந்திரமானவர்கள் என்று கேட்டால் என்னை தான் கை காட்ட தோன்றும். அவள் தனி ஒரு ஆளாய் எங்கு வேண்டுமானாலும் போவாள். புது இடத்திற்கு செல்ல எனக்கு எப்போதும்



ஒரு துணை வேண்டும். ஒன்று வேண்டாம் என்றால் முகத்திற்கு நேராய் சொல்லும் துணிவு அவளுக்கு உண்டு. நானோ வேண்டாம் என்று சொல்வதற்கு பல காரணங்களை சொல்வேன். இப்போது யார் அதிக சுதந்திரமானவர்கள் என்று கேட்டால் அவளை தான் கை காட்ட தோன்றும்.

ஒரு பெண் சுதந்திரமானவளா இல்லையா என்பதை அவளின் ஆடைகளோ தோற்றமோ முடிவு செய்வதில்லை. அவள் பேச்சு திறமையோ அல்லது கல்வி தகுதியோ கூட முடிவு செய்வதில்லை. ஒரு பெண் சுதந்திரமானவள் என்பதை அந்த பெண் தான் முடிவு செய்கிறாள்.

மனிதன் தோன்றிய காலத்தில் , ஆண்களால் செய்ய முடியாத இன விருத்தியை பெண்கள் செய்வதனாலேயே பெண்களுக்கு அதிக மதிப்பும் மரியாதையும் இருந்தது. அதனால் தான் விருத்தி அடையும் அனைத்தையும் பெண் உருவிலேயே கொண்டாடினார்கள். பூமி , நதி , கடல் , மழை என அனைத்தையும் பெண் உருவிலேயே வழிபட்டனர் ஆதி மனிதர்கள். பெண் பிள்ளை பெற்று வேட்டைக்கு செல்ல முடியாத போதும், ஒரு சராசரி ஆணை விட பெண் சற்று பலவீனமாக இருக்கும் காரணத்தினாலும் பெண்கள் ஆண்களை விட சற்று குறைவானவர்களாவே பின்னர் பார்க்கப்பட்டனர். பெண்ணின் விருத்திக்கு ஆணின் விந்து தான் மூலம் என்று அறிந்த காலம் முதல் பெண்கள் அடிமைகள் போன்றே நடத்தப்பட்டனர்.

பெண் அடிமை தனத்தில் மகப்பேறுக்கு பின்னர் அவர்களின் ஆடைகளை கொண்டே அடக்கி ஆண்டு வந்தனர். ஆண்கள். குதிரை ஏறவும், விரைவாய் ஓடவும் ஆண்களுக்கு வசதியான உடைகள். பெண்களின் உடைகளோ வீட்டு வேலை பார்க்கவும் , ஆண்களை கவர்வது போன்ற உடைகளுமே கொடுக்க பட்டனர்.

இந்தியாவில் இருந்தவரை, 20 அடியில் தள்ளி நிற்கும் உருவம் ஆனா பெண்ணா என்று யூகிக்க கடினமாக இருந்ததில்லை. ஆஸ்திரேலியாவில் அவ்வளவு சுலபமானதாக இருப்பதில்லை. குறைந்த முடி கொண்டு ஜீன்ஸ்,ட்ஷிர்ட் ஆணியும் பெண்களும், நீளமான முடி கொண்டு ஷார்ட்ஸ் அணிந்த ஒரு ஆணும் தான் எந்த பாலினம் என்பதை கணிப்பதை சுலபமாக்குவதில்லை. ஆண் பெண் வேறுபாட்டிற்கு அடிப்படையான உடை இலக்கணம் இன்று தகர்ந்து கொண்டிருக்கிறது. அப்போது பெண்கள் சுதந்திரம் அடைத்து கொண்டுதானே இருக்கிறோம் என்றால், பதில் எதிர்மறையாகத்தான் இருக்கிறது.

ஊர் தெருவில் நடக்கும் பொழுது , நன்றாக குடித்து விட்டு , தன் மனைவியை நடுரோட்டில் போட்டு அடிக்கும் ஆண்களை பலமுறை பார்த்திருக்கிறோம். இங்கு அப்படி ஒரு முறை கூட பார்த்ததில்லை. அப்போது இந்த நாட்டு ஆண்கள் எல்லாம் பக்குவம் அடைந்து விட்டார்களா! இல்லை.

ஆஸ்திரேலிய பாராளுமன்றத்திற்குள்ளேயே அதிகளவில் பெண் ஊழியர்கள் பாலியல் இச்சைக்குள்ளாகியுள்ளனர். பிரதமர் ஸ்கொட்மொறிசன் கூட மன்னிப்புக்கேட்டுள்ளார். நாட்டின் தலைவர்கள் உள்ள கோட்டைக்குள்ளேயே இந்த சீத்துவமெனில் ஊருக்குள் சொல்லவா வேண்டும்.

தன்னை விவாகரத்து செய்துவிட்டாள் என்ற காரணத்தால் பிறந்த குழந்தைக்கு பால் கொடுத்து கொண்டிருந்த தன் முன்னாள் மனைவியின் நெஞ்சில் கோடாரியைப் பாய்ச்சி கொலை செய்த நிகழ்வை கான்பரா இன்னும் மறக்கவில்லை. அண்டை வீட்டில் தினமும் கணவன் மனைவியை அடிக்கும் சத்தம் கேட்பதாக காவல் துறைக்கு தகவல் வர, அவர்கள் விரைந்து சென்று வீட்டு கதவை தட்ட, மூக்கில் இரத்தம் வழிய , கண்கள் சிவக்க அந்த மனைவி கதவை திறக்க, பின்னிருந்த கணவன் காவலர்களை எட்டி பார்த்து விட்டு சிறிதும் பதட்டமின்றி உள்ளே செல்கிறான். அவளை மீட்டெடுத்து , மருத்துவமனையில் அனுமதித்து, கணவன் மேல் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற பொழுது, தான் கால்தவறி கீழே விழுந்ததுனாலேயே அடிபட்டது என்று அடிபட்ட மனைவயே நீதிமன்றில் சாட்சியம் சொல்ல, உதவ சென்ற காவல் அதிகாரிகள் மீது பொய் வழக்கு போட்டதற்காக அபராதம் விதிக்க பட்டது. இது நடந்ததும் ஆஸ்திரேலியாவில் தான்.

மேலே குறிப்பிட்டவை இரண்டு எடுத்துக்காட்டுகள் தான். இந்திய பெண்களை விட ஆஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்த பெண்கள் அதிக சுதந்திரமானவர்கள் என்ற பிம்பத்தை உடைக்க ஏராளமான எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. உலகின் சிறந்த 100 பெண்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்த கோகோ கோலாவின் CEO இந்திரா நூயி ஒரு பேட்டியில் ‘நான் வேலை முடிந்து வீட்டிற்குள் நுழையும் போதே ஒரு தாயகத்தான் வருவேன். வீட்டு வேலைகள் அனைத்தையும் நான் தான் பார்ப்பேன்’ என்று குறிப்பிட்டிருந்தார். அவரை விட , பச்சிளம் குழந்தைகளை தூக்கி கொண்டு கூலி வேலைக்கு சென்று வந்து , வீட்டு வேலையை தன் கணவனுடனும் மற்ற குழந்தைகளுடனும் பங்கிட்டு கொள்ளும் எளிய பெண்கள் அதிக சுதந்திரமானவர்கள்.

ஒரு பெண் சுதந்திரமானவளா இல்லையா என்பதை அந்த பெண் தான் முடிவு செய்கிறாள். அவள் அடிமை சங்கிலியை உடைத்தெறிய ஓராயிரம் வழிகள் இருக்கின்றன. அவள் அதில் எதை தேர்ந்தெடுக்க போகிறாள் என்பதும் அனைத்தையும் மறுதலித்து ஒரு அடிமையாய் வாழ்வதும் கூட அவள் விருப்பம் தான். ஆனால் அவள் விட்டு செல்லும் பாதையில் தான் தன் பிள்ளைகளும் பயணிக்க போகிறார்கள் என்பதை மட்டும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

‘ஆணும் பெண்ணும் வேறுவேறானவர்கள், ஆனால் சமமானவர்கள்’ - ஓவியா.

மகளிர் தினத்தில் மட்டும் பெண்களின் வீரதீர செயல்களை பேசி ஊரை மகிழ்விப்பதை விடுத்து ஒவ்வொருவரும் அவர்கள் வீடுகளில் மகளிருக்கான அங்கீகாரத்தை அளிப்பது அடுத்த தலைமுறையிலிருந்தாதவது மாற்றம் பெறும் என்பதே நம்பிக்கை.

# மகனை ஜனாதிபதியாக்க மஹிந்த போடும் திட்டம்!

● சுழியன்



உக்ரைன் ரஷ்யா, மோதல் தொடர்பிலேயே உலகின் பார்வை திரும்பியுள்ளது. இலங்கை வாழ் மக்களும் என்ன நடக்கின்றதென கழுகுப் பார்வையை செலுத்திவருகின்றனர். இணைய ஊடகங்களிலும் இது தொடர்பான தேடுதல் வேட்டை உச்சம் தொட்டுள்ளது. ஏனெனில் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான மோதலானது இலங்கையின் பொருளாதாரத்தையும் புயலாக தாக்குமென்பது வேதனைக்குரிய விடயம்.

சரி, சர்வதேச விவகாரம் ஒருபுறம் இருக்கட்டும், இலங்கை அரசியல்மீது பார்வையை செலுத்தினால், அது இன்னமும் ஆபத்துக்கட்டத்தை தாண்டவில்லையென்பதே கசப்பான உண்மை. அந்தளவுக்கு சர்ச்சைகளும், சண்டைகளும் ‘அரபிக் குத்து’ போல தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றன.

நிலைமை இவ்வாறிருக்கையில் - ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் காலம் இருந்தும் - முன்கூட்டியே பிரதான கட்சிகள் - வேட்பாளர்கள் தேர்தலை எதிர்கொள்ள தயாராகி வருகின்றமைதான் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து பஸில் ராஜபக்ச தனது ஆட்டத்தை அதிரடியாக ஆரம்பித்துள்ளார். அநுராதபுரம் கூட்டம் ஊடாக அதற்கான அடித்தளத்தை இட்டுள்ளார்.

மறுபுறத்தில் சஜித், சம்பிக்க, பொன்சேகா மற்றும் கருஜயசூரிய போன்ற முக்கியமான அரசியல் பிரமுகர்களும் முன்கூட்டியே, திரைமறைவில் திட்டங்களை வகுத்துவருவதால், கொழும்பு அரசியல் விரைவில் களைகட்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அதுமட்டுமல்ல கட்சி தாவுதல், காலைவாருதல், கழுத்தறுப்பு செய்தல், குதிரைப்பேரம் என சந்தர்ப்பவாத அரசியலுக்கே உரித்தான அத்தனை அம்சங்களும் இனியே அரங்கேறுமென ஆருடம் கூறப்பட்டுள்ளது.

ஆம். பங்காளிகளை பந்தாடிவிட்டு, தனிவழி பயணத்துக்கு தயாராகும் பஸிலின் கண்கணில் மண்ணை தூவிவிட்டு, பலமானதொரு வேட்பாளர்களை களமிறக்க விமல், கம்மன்பில, வாசு உள்ளிட்டவர்கள் திட்டம தீட்டிவந்தனர். அரசியல் களத்தில் நன்மதிப்பை பெற்ற ஒருவருக்கு ஜனாதிபதி ஆடை அணிவித்து அழகுப்படுத்தி பார்ப்பதே பங்காளிகளின் ஆசையாக இருந்தது. ஆனால் உஷாரான பஸில் விமல், கம்மன்பில போன்றவர்கள் அமைச்சரவையில் இருந்தே தூக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கிடையில் தம்பி பஸிலின் ஜனாதிபதிக் கனவை தகர்த்து, தனது மூத்த மகன் நாமலை அரியணையேற்றுவதற்கு பிரதமர் மஹிந்த அயராது உழைத்துக்கொண்டிருக்கின்றார்.

குறிப்பாக நாமல் ராஜபக்சவை முன்னிலைப்படுத்திய பாரிய பரப்புரை வேலைத்திட்டமொன்று மார்ச் 25 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு காலி மண்ணில் பெருமெடுப்பில் இடம்பெறவுள்ளது. ‘இலங்கையின் நம்பிக்கை’ என்ற மகுடத்தின்கீழ்தான் நாமலின் ஆட்டத்துக்கான துவக்கம் அமையவுள்ளது.

இராஜாங்க அமைச்சுகளின் வேலைத்திட்டம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்தல் என்ற போர்வையிலேயே இந்த அரசியல் நகர்வு மக்கள் மத்தியில் அரங்கேற்றப்படவுள்ளது. இதற்கான ஒருங்கமைப்பு வேலைத்திட்டம் நாமலின் சகாவான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் தமித்த விக்ரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை வெற்றிகரமாக செயற்படுத்துவது தொடர்பில் பன்நாட்டு அனுபவத்தைப்பெறுவதற்கு அவர் தற்போது வெளிநாடு பறந்துள்ளார் என்பதே லேட்டஸ் தகவலாகும்.

2030 ஜனாதிபதித் தேர்தலே நாமலின் இலக்காக இருந்தது. ஆனால் நாளுக்கு நாள் ராஜபக்சக்களின் செல்வாக்கு சரிந்துவருவதால், தனது தந்தை செயற்பாட்டு அரசியலில் இருக்கும்போதேபதவிக்குவந்துவிடவேண்டுமென்பதால்தான் நாமல் 2024 ஐ இலக்குவைத்துள்ளார். இதனால்தான் பஸிலுக்கும், நாமலுக்கும் இடையில் தற்போது பணிப்போர் மூண்டுள்ளது. இந்த மோதலில் நாமல் பக்கமே ஜனாதிபதி கோட்டா நிற்கின்றார் என தெரியவருகின்றது.

நாமல் ஜனாதிபதியானால், மஹிந்தானந்த அளுத்கமகேவை பிரதமராக்க வேண்டும் என்ற திட்டமும் மஹிந்தவிடம் உள்ளதாம். இது தொடர்பில் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்.

ஏனெனில் பஸிலுக்கும், மஹிந்தானந்தவுக்கும் அரசியல் உறவென்பது அவ்வளவு நல்லதாக இல்லை. கொழும்பு மாவட்டத்தில் விருப்பு வாக்குப் பட்டியலில் விமலை இரண்டாவது இடத்துக்கு தள்ளிய பஸில், கண்டி மாவட்டத்தில் மஹிந்தானந்தவையும் பின்னிலைப்படுத்தினார். அதுமட்டுமல்ல ரஞ்சித் பண்டாரவை கண்டி அமைப்பாளராக்கியதும் மஹிந்தானந்தவை ஓரங்கட்டவே என்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ADVERTISEMENT





# போர் விரும்பிகளா மக்கள்?

● பொன்ராஜ் தங்கமணி

உலகம் முழுதும் கடந்த 3 வாரங்களாக ரசியா உக்ரைன் போர் பற்றிய பேச்சுகளே எங்கும் ஆக்கிரமித்துள்ளன.

ஒரு விறுவிறுப்பான கால்பந்து போட்டியில் இரண்டு அணிகள் மோதும் போது, ஒவ்வொரு அணிக்கும் அதற்கென ஒரு ரசிகர் கூட்டம் இருக்கும். அதுபோலவே இந்தப் போரின் போதும், உக்ரைனுக்கு ஆதரவாக ஒரு பெரும் கூட்டமும், உக்ரைனுக்கு பின்னணியாக அமெரிக்கா இருக்கிறது என்பதால் ரசியாவிற்கு ஆதரவாக ஒரு கூட்டமும் இருக்கின்றன. அவை தாங்கள் சார்ந்த நாடுகளுக்கான ஆதரவு பிரச்சாரத்தை மேற்கொண்டுவருகின்றன.

போர்கள் மிக ஆபத்தானது என பெரும்பாலானவர்கள் அறிந்து இருந்தாலும், ஒரு போர் தன்னை பாதிக்காத வரையில் அந்தப் போரை ஒரு ரசிக மனப்பான்மையோடு பார்க்கும் மனோபாவம் பொதுவில் மனிதர்களிடத்தில் உள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

எந்தத் தலைப்பைப் பற்றி பேசினாலும் ஆர்வம் கொள்ளாத சிலர் கூட, போரைப் பற்றி பேசும் போது ஒருவித ஆர்வத்தை வெளிப்படுத்துவதை நீங்கள் அவதானித்து இருக்கலாம். மனித மூளைக்குள் இருக்கும் வன்முறை குணத்துக்கு இதுபோன்ற செய்திகள் தீனி போடுவது கூட அதற்கு காரணமாக இருக்கலாம்.

அதிகாரத்தின் கோர முகத்தை பல இனத்தினரும் வெவ்வேறு சூழலில் சந்தித்து இருந்தாலும், நேரடியாக போரின் தாக்கத்தை 1950களுக்கு பிறகு அனுபவித்தது ஒருசில இனக் கூட்டம்தான். இந்த கட்டுரை எழுதப்படும் 2022 மார்ச் முதல் வாரத்தில், உக்ரைனில் ரசியா தாக்குதலை தீவிரப்படுத்தி இருக்கிறது.

இந்தத் தாக்குதலை ஒவ்வொருவரும் பார்க்கும் கண்ணோட்டம் மாறுபட்டதாக உள்ளது. ஏறக்குறைய மேற்கத்திய ஊடகங்கள் பெரும்பாலும் ரசிய அதிபர் புடினை அதிகார வெறி பிடித்த - போர் பிரியராக காட்டி, உக்ரைன் மீதான தாக்குதலை கண்டிக்கிறன. இந்த ஊடகங்கள் பலவும் 2008ல் இருந்து உக்ரைன் நேட்டோ அமைப்பில் சேர எடுக்கும் முயற்சிகள் பற்றியோ அதன் பின்புலம், அதனால் ரசியாவிற்கு ஏற்படும் நெருக்கடிகளைப் பற்றி அதிகம் வாய் திறந்ததில்லை.

இதில் ஆஸ்திரேலியாவின் இருந்து வெளிவரும் முக்கிய ஊடகங்களும் அடக்கம்.

மற்றொரு பக்கம், எதிலும் மூக்கை நுழைத்து தன்னுடைய அதிகார பலத்தை காட்டும் அமெரிக்காவிற்கு புடின் தான் சரியான பதிலடி கொடுக்கிறார் என்கிற கோணத்தில், ஒரு இறையாண்மை கொண்ட உக்ரைன் நாட்டை ஈவு இரக்கமின்றி தாக்கும் புடினை கொண்டாடும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், அமெரிக்கா மற்றும் ரசியா இரு துருவங்களாக உருவான போது, இரண்டு நாடுகளிடமும் சேரப்போவதில்லை என்னும் அணி சேராத கொள்கையை முன்மொழிந்தார் இந்தியாவின் அன்றையப் பிரதமர் நேரு. இதை இன்றளவும் பின்பற்றி வருகிறது இந்தியா. இந்த அணி சேராத கொள்கையை இந்தியா கொண்டு இருந்தாலும், அமெரிக்கா மற்றும் ரசியாவிற்கு தன்னுடைய சந்தைப் பொருளாதாரத்தை திறந்து விட்டு இரண்டு நாடுகளையும் மகிழ்ச்சியில் தொடர்ந்து வைத்து வருகிறது இந்தியா என்பது தான் உண்மை. நடுநிலைமை என்கிற நிலை பெரும்பாலும் பாதிக்கப்படும் சமூகத்திற்கு எதிராகவே இருந்து இருப்பதை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இந்தப் போர்ச் சூழலில் இந்தியாவின் அணி சேராத கொள்கை, உக்ரைனுக்கு பாதிப்பாகவே அமையும்.

உக்ரைனின் அன்டோனோவ் விமானம், ரசியவின் தாக்குதலில் அழிக்கப்பட்ட போது, ஈழத்தில் இருந்து ஆஸ்திரேலியாவிற்கு புலம் பெயர்ந்த தமிழர் ஒருவர், இலங்கையில் இந்த விமானங்கள் தான் மனிதக் கழிவுகளை உள்ளடக்கிய பீப்பாக்களால் தாக்குதல் நடத்தியது என்கிற செய்தியை தன் முகநூலில் பகிர்ந்தார். அதைத் தொடர்ந்து அந்த செய்தியை சிலரும் ஆமோதித்தனர். சிலர் அதையே முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்கிற திருக்குறளை மேற்கோள் காட்டினர். இது போன்ற அக்கிரமங்கள் கூட நடந்ததா என ஆராய்ந்தால், இன்னொரு ஈழத் தமிழர் இதை தாம் சகடை விமானம் என்றழைப்பதாகவும் கூறினார். மனிதக் கழிவுடன் சேர்த்த சுடுதார் மற்றும் இரும்புகள் சேர்த்து ஒரு பெரிய பரல்கள் மூலம் இவ்வகை விமானங்களின் வழியே தாக்குதல் நடத்தப்பட்டது என இன்னொருவர் சொன்னார். நடந்தது எதுவாயினும் போரின் தாக்கம் எவ்வளவு கொடியது என்பது இவ்வாறனவர்களின் கதைகளின் ஊடாக தெளிவாகிறது.

இந்தக் கட்டுரை எழுதப்படும் நேரம் ஏறக்குறைய 5000 தமிழர்கள் உட்பட 18,000 இந்தியர்கள் உக்ரைனில் உள்ளார்கள் என இந்தியாவின் செய்தித்தாள்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவர்களை மீட்க வேண்டிய ஒன்றிய அரசு பிப்ரவரி 22க்கு பிறகு மிகவும் கால தாமதமாகவே விழித்து இருக்கிறது. அமெரிக்கத் தூதரகம் தன் மக்களை 24 ஜனவரி முதலே வெளியேற்றத் தொடங்கி,போர் தொடங்குவதற்கு முன்னரே பெரும்பான்மையானவர்களை வெளியேற்றி விட்டது. வெளிநாடுகளில் வாழும் எந்த இன மக்களாக இருந்தாலும், இது போன்ற போர்ச் சூழலில் அமெரிக்க வெளியுறவுத் துறையின் செயல்பாடுகளை கவனித்து அதற்கு ஏற்ப முடிவுகள் எடுப்பதன் முக்கியத்துவத்தை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பார்வைகள் வெவ்வேறு விதமாக இருந்தாலும், ரசிய அதிபர் புடினோ, உக்ரைன் அதிபர் விளாடிமிர் செலென்ஸ்கியோ தெருவில் இறங்கி போரிடப் போவதில்லை. குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து அவர்கள் கொடுக்கும் உரைகள், வீடுகளில் இருக்கும் மனிதர்களை துப்பாக்கி ஏந்தி சண்டை போட வைக்கும்.

அப்பாவி பொதுமக்களுக்கும் ராணுவத்துக்கும் தேச வெறி, இனவெறி ஊட்டப்பட்டு பலிக்கடா ஆக்கப் படுவார்கள். பெண்கள் விதவைகளாகவும், குழந்தைகள் பெற்றோர் இழந்தவர்களாகவும் ஆக்கப்படுவார்கள். முடிவில் ஏதோ சிலரின் அகம்பாவத்திற்கு போர் முடிவுகள் தீனியாகும். இருபத்தியோராம் நூற்றாண்டில் அணு ஆயுதம் சூழ்ந்த உலகில், ஆயுதங்கள் கொண்டு போர் புரிவது புவிசார் அரசியலுக்கு தீர்வு கிடையாது என்பது சாமானிய மனிதனுக்கே தெரிந்து இருந்தாலும், சிலரின் அதிகாரப் பசிக்காகவே போர்கள் உருவாகின்றன.

அதுவாகினும், உக்ரைனை அடிமைப்படுத்த நினைக்கும் ரசியாவின் எண்ணம் என்பது ஆயுதங்களால் இப்பொழுது நிறைவேற்றப்பட்டாலும், இந்தப் போர் உக்ரைனியர்களின் மனதில் ஆறா வடுவை உண்டாக்கும். அந்த வடு வேறு வடிவத்தில், இன்னும் சில வருடங்களில் மீண்டும் வரும் என்பது தான் எதார்த்தமான உண்மை.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# ஆரம்பித்த நோக்கங்களின் வழி இயங்குகின்றனவா சங்கங்கள் - மன்றங்கள்?


02
தென்பாண்டி நாட்டான்

ஓர் இனத்தின் அடையாளத்தினை உலகறியச் செய்வது அந்த இனத்தின் தூரநோக்குச் சிந்தனையும் தன்னிகரில்லாத் தலைமைத்துவமுமே ஆகும். இதில் எங்கள் பார்வை குறைந்தால் நிச்சயம் நாம் எமது மொழி, பண்பாட்டு அடையாளங்களை தொலைத்து பிறர் சிதைக்காமல் நாங்களாகவே சிதைந்து விடுவோம்.

முன்னைய ஆக்கத்தில் முதலாவது கேள்வியாக, எங்களுக்கு தூரநோக்குச் சிந்தனை இருக்கிறதா அப்படி இருந்தால் அது - அவை என்ன ? அரசியல் விடுதலை மட்டுமல்ல ஒரு இனத்தின் எழுச்சி அதில் மட்டும் தொங்கிக்கொண்டு எவ்வளவு காலம் ஓடப்போகிறோம் ? என்ற கேள்வியைச் சூழ்ந்த குறிப்புகளைப் பார்த்தோம்.

இம்முறை, புலம்பெயர் நாடுகளில், புலம்பெயர்ந்துள்ள முதற் தலைமுறையினர், கோயில் மற்றும் சங்கங்களின் பதவிகளுக்கு அடிபடுவது இன்னும் எவ்வளவு காலம் வரை நீடிக்கும். அதற்கு பின்னர் கோயில்கள், சங்கங்களுக்கு என்ன நடக்கும்? அந்தச் சங்கங்கள் அமைப்புகளின் ஆரம்ப நோக்கங்கள் மற்றும் விழுமங்கள் பின்பற்றப் படுகின்றனவா? என்ற இரண்டாவது தலைப்பின் கீழ் சிந்திப்போம்.

புலம்பெயர் நாடாகினும் சரி, உள்ளூராயினும் சரி அன்றுதொட்டு இன்று வரை சங்கங்கள், மன்றங்கள், கோயில்கள் என்று பல பொது அமைப்புகள் உயரிய நோக்கங்களைக் கருத்தில்கொண்டு உருவாக்கப்படுகின்றன. சமூக சிந்தனையுள்ள பெரியவர்களும் மற்றும் இளையோரும் இப்படியான சங்கங்களை காலத்திற்கு காலம் உருவாக்கிக்கொண்டே வருகின்றனர். உருவாக்கும் பொழுது அவர்களின் உயரிய சிந்தனைகளில் எழுந்த நோக்கங்களை கலந்தாலோசித்து, அவற்றினை சங்கத்தின் அல்லது அமைப்பின் நோக்கங்களாக அல்லது குறிக்கோளாக தீர்மானித்து அதன்வழி இயங்குகின்றனர். அதனை வைத்தே சங்கத்தினை பிறரிடம் எடுத்துச்சென்று நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றனர். இப்படித்தான் ஒரு சங்கம் சமூக நலனுக்காக கட்டியெழுப்படுகிறது.

ஆனால், காலப்போக்கில் சங்கங்கள் அந்த நோக்கத்தின் வழி இயங்குகிறதா என்று உற்றுநோக்கினால், உங்களுக்கு இலகுவாகப் புரியும் ஏன் நாங்கள் தடம் மாறுகிறோம் - தடுமாறுகிறோம் என்று. இதனை நீங்களே உங்கள் நாட்டில் உள்ள, ஊரில் உள்ள சங்கங்களில் சோதித்துப்பாருங்கள். எத்தனை நிர்வாக உறுப்பினர்களுக்கு, சங்கத்தின் நோக்கங்கள் தெரிந்திருக்கும் என்று கூடத் தெரியவில்லை. இப்படி நோக்கங்கள் வழி, நில்லாது இயங்கும் சங்கம்,மன்றம் மற்றும் அமைப்புகள் எப்படி சமூகத்திற்கு பயனுள்ளதாக அமையும்.

புலம் பெயர் நாடுகளில் சங்கங்கள், கோயில்கள் மன்றங்களில் முதல் வந்த தலைமுறையினரே தற்போழுது முழுமையாக நிர்வகித்து வருகின்றனர். அவர்களுள் பதவிப் போட்டிகள், குழுப் பிரிவினைகள், ஆணவ வீக்கங்கள், என்று பலதரப்பட்ட பாகுபாடுகள். ஏதோ சாகா வரம் பெற்றவர்கள் போன்ற நடவடிக்கைத் தொனிகள்.

தங்கள் காலம் மற்றும் ஆயுள் முடிய இந்த சங்கங்கள், மன்றங்கள், கோயில்களின் நிலை என்ன, அவற்றினை இன்றிலிருந்தே திட்டமிட்டு சரிவர ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்கள் மாறாமல் அடுத்த தலைமுறைத் தலைவர்களை உருவாக்கி அவர்களிடம் கையளிக்கும் வேலைகளைப் பாராமல், ஏன் சிந்திக்காமலும் கூட இன்றும் தங்களுக்குள் அடிபட்டு, பிரிவினைகளை வலுவாக்கி, நோக்கங்களில் இருந்து விலகி தங்கள் ஆணவ மற்றும் பிடிவாதப் பிடிக்குள் அமைப்பினை இழுத்துச் செல்லும் நிலைமையே பொதுவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒரு சிறிய நிகழ்கால உதாரணத்துடன் இதனைப் பார்ப்போம். சிட்னியில் உள்ள கோயில் ஒன்றில் கட்டடம் ஒன்றை பெரியளவில் கட்ட வேண்டும் என்று ஒரு சாராரும், அமைக்க கூடாது என்று இன்னொரு சாராரும், இல்லை நாங்கள் விரும்பியபடி அமைக்கவேண்டும் என்று இன்னொரு சாராரும் வாக்குப் பலத்தினை பரிசோதித்து வருகின்றனர். இதற்காக அவர்கள் கொடுத்திருக்கும் விலை பல இலட்சம் டாலர்கள்.

கோயிலுடன் சைவத் தமிழர்களுக்கு ஒரு பண்பாட்டு மண்டபத்தினை கட்டவேண்டும் என்பது சிறப்பான முடிவே. தனியே வழிபாட்டுடன் மட்டும் நின்றுவிடாமல் பண்பாட்டு நடுவமாக மாற்றுவதே சிறந்த சிந்தனையாகும். அதை எவ்வாறு கட்டவேண்டும், எப்போது கட்டவேண்டும் என்று இருபகுதியினரும் இணைந்து கலந்து ஆக்கபூர்வமாக செயல்படாமல் ஆணவப் போக்கினால் வாக்குப் பலத்தினை பரிசோதிப்பதே இங்கு சிந்திக்கவேண்டிய விடயம்.

அதாவது செயற்திட்டத்தினை முன்னிறுத்தாமல், அதை யார் தொடங்கினார்கள், யார் செய்கிறார்கள் என்று தேடி அவர்களுடனான ஆணவ மற்றும் காழ்ப்புணர்வுகளை பண்பாட்டு வளர்ச்சியில் காட்டுவது சரியா என்பதுதான் எனது வினா.

ஒரு நல்ல நோக்கத்திற்காக, சிறந்த சிந்தனையில் உருவாகிய அமைப்புகள் இப்படியான உள்ளக அரசியலில் வருடங்களை மற்றும் தங்கள் ஆயுளைக் கழித்துவிட்டு தொடங்கிய நோக்கங்களில் இருந்து விலகுவது தான் கவலைக்குரிய விடயம். இப்படியான பல உதாரணங்கள் பல சங்கங்கள் மற்றும் மன்றங்களில் உள்ளன. இனியாவது இவற்றினை நாங்கள் திருத்தி, நோக்கங்களை முன்னிறுத்தி, சமுதாயத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பதுடன், எங்கள் பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

இந்த சந்ததியினர் ஆயுள் காலம் முடிந்தவுடன் சங்கங்கள், கோயில்கள் மன்றங்களில் எங்கள் அடுத்த சமுதாய பிள்ளைகள் எவ்வளவு ஆர்வத்துடன், எத்தனை பேர் வருவார்கள் என்பது ஒரு பெரும் வினா. அவர்கள் வராதவிடத்து, நாங்கள் செய்யும் அனைத்து அடிப்படை வளர்ச்சிப்படிகளும் பாதிநடுவில் விடுபடப்போகின்றனவா? இது சகல துறைக்கும் பொருந்தும். அதாவது அரசியலாயினும் சரி, இறைபணியாயினும் சரி, பொது அமைப்புகள் ஆயினும் சரி எல்லாக் கட்டமைப்புகளும் இந்தச் சவால்களை எதிர்நோக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏன் ஈழத்திலும் கூட இயங்கும் பொது அமைப்புகளில் எத்தனை அமைப்புகள் அடுத்த தலைமுறைத் தலைவர்களை உருவாக்குகின்றனர். இறக்கும் வரை தாங்களே தலைவர் என்று இயங்கும் அமைப்புகளும் சில இருக்கத்தான் செய்கின்றன. இதனால் ஏற்பட்ட வரலாற்று அழிவுகளை நாம் சிந்தித்து, கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் நடந்து முன்னேறவேண்டும். உதாரணமாக ஆறுமுகநாவலர் என்ற ஒரு மனிதனால் எங்கள் பண்பாடு பண்படுத்தப்பட்டு மேலோங்கியது. நிலங்கள், சொத்துக்கள் என்பன அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டன. அவரின் காலத்தின் பின்னர் அவையெல்லாம் எங்கே போயின, என்னவாயின. அதன் பின்னர் பண்பாட்டினைக் காப்பதற்கு பின் வந்தவர்களை எவ்வளவு கடின உழைப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது வரலாற்றில் மீண்டும் வராமல் பார்ப்பதுதான் பார்வையாளர், கொடையாளர், பங்காளிகளிகளாகிய உங்களின் வரலாறுக் கடமை.

எதிர்காலத்தில் தொடங்கும் புதிய அமைப்புகளாவது, தங்கள் நோக்கங்களை வகுக்கும் பொழுது, குறிப்பாக எதிர்காலத் தலைவர்களை, தலைமைத்துவத்தினை சங்கத்தின் நோக்கங்களின் வழி உருவாக்குவதல் என்ற நோக்கத்தினையும் சேர்த்துக் கொண்டால் சிறப்பாயிருக்கும்.

மற்றைய சிந்தனைப் பொருள், சங்கங்கள், மன்றங்கள் மற்றும் கோயில்கள் என்பன ஆரம்பிக்கப்பட்ட அல்லது அமைப்பின் நோக்கங்களின் வழி நடைபெறுகின்றனவா? சங்கங்கள் நோக்கத்தின் வழி நடந்தால், அதன் வழி மட்டும் நின்றால் நிச்சயம் பிரிவினைகள் வராது. அவை வளர வளர, பணம் பெருக அமைப்புகளில் சிக்கல் வருவது எதிர்பார்க்க வேண்டிய விடயம். ஆனால் நோக்கங்களில் இருந்து மாறாமல் அதன் வழி செயற்திட்டங்களை இயக்கினால் ஆரம்பித்த நோக்கங்களை நிறைவுறச் செய்யலாம்.

உங்களிடம் யாராவது இந்த அமைப்பிற்கு, அந்த அமைப்பிற்கு என்று நிதி சேகரிக்க அல்லது விழாவிற்கான நுழைவினை விற்க வரும்போது எப்போதாவது அந்த அமைப்பின் நோக்கம், நோக்கங்கள் என்ன என்று கேட்டிருக்கிறீர்களா ?

அப்படி நோக்கத்தினை அறியாமல், நீங்கள் கொடுத்த பணத்தில் வளர்ந்து, இப்போது நோக்கத்தினை விட்டு பதவிக்கு அடிபடும் அமைப்புகளே தற்போது ஏராளம். இது நோக்கமின்றி எங்கள் பணத்தினை நாங்களே நாசம் செய்யும் ஒரு வரலாற்று பிழையாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஷேன் வோர்ன் 52 வயதுக்குள் ஆயிரம் ஆண்டுகள்!

● A.R.V.லோஷன்

கொழும்பு SSC மைதானம் ஒரு பெரும் திருவிழா வின் ஆரவாரத்தில் சூழப்பட்ட ஒரு ஞாயிறு மாலை.

ஐந்தரை ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கையில் இடம்பெறும் முதலாவது டெஸ்ட் போட்டியில் போர்டரின் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தக்கூடிய நிலையில் அப்போது டெஸ்ட் அணியாக பெரிதாக நோக்கப்படாத இலங்கை.

அரவிந்த, அர்ஜூன இருவரும் இன்னும் இருக்க, வெறும் 58 ஓட்டங்கள் தேவை. முதல் இன்னிங்ஸில் சதமடித்த குருசிங்க ஆடுகளத்தில்.

பலருக்கு அடுத்த நாள் அரசாங்க விடுமுறைக் கனவு வேறு.

கிரிக்கெட் கண்ட சாணக்கியரில் ஒருவரான அலன் போர்டர் தனது சுழல் ஆயுதம் க்ரெக் மத்தியூசை வைத்து மூன்று விக்கட்டுக்களை சரித்து ரசிகர்களை பரிதவிக்கவிடுகிறார்.

ஆனால் இன்னுமே போட்டி இலங்கைக்கு சாதகமாக. 30 ஓட்டங்களே தேவை. 3 விக்கெட்டுக்களும் இருக்கின்றன.

அப்போது தான் போர்டர் பந்தை எடுத்து மஞ்சள் முடியோடு ஆர்வத்துடிப்போடு காணப்பட்ட ஒரு புதிய இளைஞரிடம் பந்தைக் கொடுக்கிறார்.

ஷேன் வோர்ன் அவர் பெயர்.

மூன்றாவது போட்டியில் ஆடும் வோர்ன் 225 ஓட்டங்களுக்கு ஒரே விக்கெட்டை மாத்திரம் எடுத்திருந்த புதியவரிடம் பந்தைக்கொடுத்த போர்டருக்கு வோர்னர் திருப்பியளித்தது எந்தவொரு ஓட்டத்தையும் கொடுக்காமல் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி 16 ஓட்டங்களால் ஒரு அதிசய வெற்றி !

வெளிநாட்டு மண்ணில் வோர்ன் ஆடிய முதல் போட்டியில் துடுப்பாட்டத்திலும் இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 59 ஓட்டங்களையும் எடுத்திருந்தார்.

அங்கிருந்து ஆரம்பிக்கிறது வோர்ன் மாயாஜாலம்.

இழந்துவிடுவோம் என்று தம் அணி நினைக்கின்ற போட்டிகளை எல்லாம் தன் மாயாஜால சுழலால் வென்று கொடுக்கும் அசகாயத்தனம்.

தன் ஆற்றல் மீதும் எதிரணித் துடுப்பாட்ட வீரர்கள் எத்தகைய அதிரடி வீரர்களாக இருந்தாலும் அவர்கள் மீது செலுத்திய ஆதிக்கத்தினாலும் பந்து எப்போது வோர்னின் கையில் கிடைத்தாலும் அது எந்தக் கிரிக்கெட் வடிவம் என்றாலும், அவுஸ்திரேலியாவாக இருந்தாலும் விக்டோரிய பிராந்தியமாக இருந்தாலும் அல்லது இறுதியாக அவரது தலைமைத்துவப் பண்புகள் வெளிப்பட்ட ராஜஸ்தானாக இருந்தாலும் தனது அணிக்கான திருப்புமுனையை ஏற்படுத்தியவர்.

சாதனைகளினதும் சர்ச்சைகளினதும் நாயகனாக விளங்கிய ஷேன் வோர்ன் 1990 களில் கிரிக்கெட்டின் போக்கையும் சுழல்பந்துவீச்சாளரின் முக்கியத்துவத்தையும் மாற்றியமைத்தவர்.

நீண்டகாலமாக நல்லதொரு சுழல்பந்துவீச்சாளரைத் தேடிக்கொண்டிருந்த அவுஸ்திரேலியாவுக்கு வெற்றிகளுக்கான அடிப்படையாகவும் அழிந்து அருகிக்கொண்டிருந்த லெக் ஸ்பின் வடிவத்துக்கு மதிப்பையும் ஏற்படுத்தியவர்.


சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஸ் தொடரில் தான் வீசிய முதல் பந்தையே கிரிக்கெட் உலகின் மிகச்சிறந்த பந்தாக மாற்றிய வோர்ன் இங்கிலாந்து அணியின் ஜென்ம சத்துருவாகிப் போனார். இங்கிலாந்தின் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் இவர் தான். 195 !

ஷேன் வோர்ன் தன் லெக் ஸ்பின் பந்துவீச்சை ஒரு தேர்ந்த கலை போல காட்டியவர். சில அடிகள் நடந்து ஒரு துள்ளலுடன் நாக்கைத் துருத்தி மணிக்கட்டின் சுழற்சியில் வோர்னின் பந்து காற்றில் பயணித்து ஆடுகளத்தில் வீழும்போது அது ஒரு கண்கொள்ளாக் காட்சி தான். துடுப்பாட்ட வீரர்களுக்கு அது கொலைக்களமாகத் தெரிவது வேறு கதை!

அந்தப் பந்து வோர்னின் என்ன ஆயுதம் என்று தெரிந்து விக்கெட்டாக மாறாமல் தப்பித்துக்கொள்ள ஒவ்வொருவருமே தவித்திருப்பார்கள்.

அவுஸ்திரேலியாவுக்காக டெஸ்டில் 708 விக்கெட்டுகள் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 293 விக்கெட்டுகள்

அந்தக் காலகட்டத்தில் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்கள் சச்சின் டெண்டுல்கர், பிரையன் லாரா ஆகியோரோடு வோர்னுக்கு இருந்த போட்டியைப் போலவே, பின்னாளில் வோர்னை முந்தி உலக சாதனை படைத்த முத்தையா முரளிதரனுடன் இருந்த ஆரோக்கியமான போட்டியும் ரசிகருக்குப் பெருவிருந்து தான்.




அர்ஜூன ரணதுங்க முதல் மார்லன் சாமுவேல்ஸ் வரை அவரது மைதான மோதல்கள் செய்திகளுக்குப் பெருவிருந்து.

ஆனால் அவை தன் போட்டிகளைப் பாதிக்கவிட்டதில்லை.

மூன்று தரம் கிரிக்கெட் வாழ்க்கைக்கே முடிவுரை எழுதியிருக்ககூடிய உபாதைகளும் சத்திரசிகிச்சைகளும், கிரிக்கெட் சபையினால் விதிக்கப்பட்ட இரண்டு தடைகளும் வோர்னின் இன்னும் சில நூறு விக்கெட்டுக்களையாவது அபகரித்திருக்கின்றன. அதேபோல அத்தடைகளும் வோர்ன் மீதான மதிப்பின் மீது சற்றேனும் சரிவை ஏற்படுத்திய சில சம்பவங்களும் வோர்னின் தலைமைப் பொறுப்பை இல்லாமல் செய்திருந்தன.

இது வோர்னுக்கு இறுதிவரை மாறாத கவலையை வழங்கியிருந்தாலும் அவுஸ்திரேலிய வெற்றிகளை மேலும் அதிகரித்திருக்கக்கூடிய ஒரு தலைவரை இழந்த பாதிப்பு அவுஸ்திரேலியாவுக்கு மட்டுமல்ல, கிரிக்கெட்டுக்கும் தான்.

தான் தலைமை தாங்கிய ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் பின்னர் ஹம்ப்ஷயர் பிராந்திய அணி, பயிற்றுவிப்பாளராகவும் இருந்து தலைமை தாங்கிய ஐபிஎல் அணியான ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகியற்றை வெற்றிகரமாக நடத்திக்காட்டி தன்னை நிரூபித்திருந்தார்.

திறமையான புதியவர்களை இனங்காண்பதும் ஊக்குவிப்பதும் ஷேன் வோர்னின் தனிச் சிறப்புகள் என்றால் எதிரணி இளையோரையும் கைதூக்கி விடக்க்கூடிய ஒரு-வராக இருந்தார்.

கெவின் பீட்டர்சன், ரவீந்திர ஜடேஜா, யூசுப் பதான் மிகச்சிறந்த உதாரணங்கள்.

தான் விளையாடும் போது எவ்வாறு நூறு வீத அர்ப்பணிப்பை அளித்திருப்பாரோ அதனையே வாழ்க்கையில் தான் விரும்பும் அத்தனை இன்பத்திலும் ஊறித் திளைத்திருக்க விரும்பியிருந்தார். அதனை அவர் மறைக்கவிரும்பியதும் இல்லை.

உல்லாச விரும்பி ஆனால் வெளிப்படை. அவரது இந்தப் பலவீனங்களினால் இழந்தவை பல, எனினும் வோர்னிடமிருந்த அனைவருடனும் எளிமையாகவும் நட்பாகவும் பழகும் தன்மை, ரசிகர்களை மதிக்கும் பாங்கு போன்றவற்றினால் அதிகம் நண்பர்களை சம்பாதித்து வைத்திருந்தார்.

அஞ்சலிகளும் இரங்கல்களும் மட்டுமன்றி மெல்பேர்ண் அரங்கத்தின் முன்னிருக்கும் வோர்னின் சிலை முன் குவிந்த மலர்ச்செண்டுகளும் அவித்த பீன்ஸூம் பியர் போத்தல்களும் வோர்னை ரசிகர்கள் எவ்வளவு நேசித்தார்கள் என்பதற்கு சான்று.

52 வயது ஆயுளுக்குள் ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கும் பதிவுகளைத் தந்துவிட்டுப் போயிருக்கிறார் ஷேன் வோர்ன்.

இன்னும் கிரிக்கெட்டுக்கு அவர் பயிற்றுவிப்பாளராக நேர்முக வர்ணனையாளராகத் தந்திருக்கக்கூடிய பலவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

சாதனைகள் உடையலாம், புதிதாய் சாதனையாளர்களும் தோன்றலாம். ஆனால் ஷேன் வோர்ன் போல் ஒரு சரிதம் கிரிக்கெட்டில் கிடைக்குமா என்றால் உலகின் கிரிக்கெட் விளையாடும் ஏதோ ஒரு நாட்டின் ஒரு சிறுவன் இன்னொரு வோர்னாகத் தன்னை நினைத்துக்கொண்டே மணிக் கட்டைச் சுழற்றிக்கொண்டிருப்பான். ■

திறமையான புதியவர்களை இனங் காண்பதும் ஊக்குவிப்பதும் ஷேன் வோர்னின் தனிச் சிறப்புகள் என்றால் எதிரணி இளையோரையும் கைதூக்கி விடக் கூடிய ஒருவராக இருந்தார்.

கெவின் பீட்டர்சன், ரவீந்திர ஜடேஜா, யூசுப் பதான் மிகச்சிறந்த உதாரணங்கள்.

தான் விளையாடும் போது எவ்வாறு நூறு வீத அர்ப்பணிப்பை அளித்திருப்பாரோ அதனையே வாழ்க்கையில் தான் விரும்பும் அத்தனை இன்பத்திலும் ஊறித் திளைத்திருக்க விரும்பியிருந்தார். அதனை அவர் மறைக்கவிரும்பியதும் இல்லை.

# சமஷ்டியே எங்கள் இலக்கு!

## தீர்வு விடயத்தில் இந்தியாவைமீறி மேற்குலகம் எதையும் செய்யாது

**எதிரொலிக்கு புளொட் தலைவர் த.சித்தார்த்தன் வழங்கிய விசேட பேட்டி**

**நேர்காணல் : அரவிந்தன்**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான த. சித்தார்த்தன், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1985 இல் திம்புவில் நடந்த பேச்சுகளில் புளொட்டின் சார்பாகக் கலந்து கொண்டவர். அது தொடக்கம் தொடர்ச்சியாகவே அரசியற் செயற்பாட்டாளராக இயங்கி வருகிறார்.**

**உமா மகேஸ்வரனின் மறைவுக்குப் பின்னர் புளொட் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புளொட் ஒரு அங்கமாக செயற்பட்டு வருகிறது. இலங்கையின் சமகால அரசியல் - குறிப்பாக தமிழரின் அரசியல் நிலவரம் தொடர்பாக எதிரொலிக்காக அவரை நேரில் சந்தித்து உரையாடியபோது,**

**கேள்வி - இலங்கை இந்திய உடன்படிக்கையின் விளைவாக உருவாக்கப்பட்ட 13 திருத்தத்தைக் கூட (மாகாணசபை முறைமையை) இன்னும் முழுமை யாக நடைமுறைப்படுத்த முடியாத நிலையில், இதைப்பற்றி இந்தியா வுக்கு தமிழ்த்தேசியக் கட்சிகளில் சில கடிதம் எழுதியுள்ளன. இதன் உண்மையான தாற்பரியம் என்ன?**

பதில் - இலங்கை இந்திய உடன் படிக்கை செய்யப்பட்டபோதிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தொடக்கம்



தொடர்ந்து ஆட்சியிலிருந்த எவருக்குமே இந்த உடன்படிக்கையை அமுல்படுத்த வேண்டும் என்ற அக்கறை இருக்கவில்லை. குறைந்த பட்சத் தீர்வாக இருக்கும் மாகாண சபைகளுக்கான அதிகாரத்தை வழங்குவதற்குக்கூட இவர்கள் தயாரில்லை. இதுதான் பிரச்சினையே. இதில் இன்னொரு காரணமும் உண்டு. தொடக்கத்தில் இந்திய அமைதிப்படை இங்கே இருந்த போது மாகாணசபையை இயங்க விடாமல் விடுதலைப்புலிகள் தடுத்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட ஏனைய இயக்கங்களும் இதில் பங்கேற்கவில்லை. ஈ.பி. ஆர்.எல்.எவ்வும் ஈ.என்.டி.எல்.எவ்வும்தான் பங்கேற்றன. இதை மிகச் சாதுரியமாகப் பயன்படுத்திச் சிங்களத் தலைமைகள் 13 ஆவது திருத்தத்திலிருந்த சில அதிகாரங்களை எடுத்துக் கொண்டார்கள். பலவீனப்படுத்தினார்கள். அந்தக் காலகட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகளின் கீழ் மாகாணசபை இயங்கியதால் அதைத் தடுக்கக் கூடிய வல்லமை எங்களிடம் இருக்கவில்லை.

ஆனாலும் புலிகள் மாகாணசபையை முழுமையாக இல்லாமல் செய்ய வேண்டும் என்று செயற்பட்ட மாதிரியும் தெரியவில்லை. ஏனென்றால் அவர்களுடைய முழுமையான ஆதிக்கத்தில் வடக்குக் கிழக்குப் பகுதிகள் இருந்தபோது, மாகாணசபை அதிகாரிகளால் இயக்கப்பட்டது. புலிகள் அதற்கு அனுமதித்து, அதைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் நினைத்திருந்தால் ஒரு நாளிலிலேயே அதை நிறுத்தியிருக்கலாம்.

அதேவேளை அவர்களைப் பொறுத்தவரை மாகாணசபையை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி ஏற்றுக் கொண்டால் அது அவர்களுடைய தொடர்ந்த போராட்டத்துக்கு பொருத்தமாக இருக்காது. அர்த்தமில்லாமல் போய்விடும்.

ஆனாலும் அவர்கள் அதை முற்றாக நிராகரிக்கவில்லை. ஏனென்றால் இன்னொரு நல்ல தீர்வு எட்டப்படும்வரையில் இதைக் கை விட முடியாது எனக் கருதினார்கள். ஏனென்றால் சிங்களத் தலைமைகள் எதற்கும் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்கும் எண்ணமே எப்போதுமே இருந்ததில்லை.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் (மைத்திரி - ரணில் ஆட்சியின்போது) தீர்வுக்கான முயற்சிகள் நடந்து கொண்டிருந்தன. அதற்கான ஒரு உபகுழுவில் நானும் இருந்தேன். அப்பொழுது எனக்குத் தெரிந்தது, இது நிச்சயமாகத் தீர்வைத் தராது என்று. இதை நான் பகிரங்கமாகப் பல தடவை சொல்லியிருக்கிறேன். ஆனால் அப்பொழுது சம்பந்தன் அதில் முழுமையான நம்பிக்கையை வெளியிட்டிருந்தார்.

அப்பொழுது நான் அவரிடம் கேட்டேன், நீங்கள் தீர்வு கிடைக்கும், கிடைக்கும் என்று சொல்வதை மக்கள் நம்பிக்கையீனமாகத்தான் பார்க்கிறார்கள். இங்கே நிலைமையும் அப்படித்தானே இருக்கு என்று. அதற்கு அவர் சொன்னார், என்னைப் பொறுத்தவரை நான் அரசாங்கத்துடன் நடத்துகின்ற பேச்சுக்களில் நம்பிக்கையுள்ளவனாகவே பேச வேண்டும். அதில் நம்பிக்கை வைத்தால்தான் பேசமுடியும். நீங்கள் உங்கள் இடத்திலிருந்து கொண்டு பேசுவதைப்போல என்னுடைய இடத்திலிருந்து கொண்டு பேச முடியாது என. இறுதியில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் அந்த ஆட்சியும் கழிந்தது.

இப்ப இந்த அரசாங்கம் இப்போதிருக்கின்ற இந்தக் குறைந்த அளவிலான 13 ஐக் கூட இல்லாதொழித்து, புதிய திருத்தமொன்றுக்கு தயாராகிறது. இதை நாம் விட்டு விட முடியாது. இந்தச் சூழலில்தான் நாம் இந்தியப் பிரதமருக்கு இது குறித்து ஒரு கடிதத்தை எழுத முற்பட்டோம்.

ஏனென்றால் மாற்றுத்தீர்வைத் தராமலே இருக்கின்றதையும் எடுத்துக் கொள்வதற்கு இடமளிக்கக் கூடாது என்ற வகையில், இந்த முயற்சியை செல்வம் அடைக்கலநாதன் ஆரம்பித்து, பிறகு நானும் அவருமாக முயற்சித்து பின்பு ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கி அந்தக் கடிதத்தை இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பினோம்.

இந்த 13 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துவதில் இந்தியாவுக்கு நேரடியான பொறுப்பிருக்கிறது. ஏனென்றால் தமிழர்களின் சார்பில் அவர்கள்தான் கையெழுத்திட்ட தரப்பு. ஆகவே அவர்களுக்கு முழுமையான அதிகாரமும் பொறுப்பும் (Moral Responsibility) இருக்கிறது இதில்.

மற்றும்படி நாமும் முடிந்த முடிவாக 13 திருத்தத்தை நிறைவானது என்றோ மாகாணசபை முறைமை போதும் என்றோ கூறவில்லை. எமது இலக்கு சமஸ்டியே. ஆனால் அதை எட்டும் வரை இதை நாம் விட்டு விட முடியாது. இது ஒன்றுதான் இதுவரையான எமது அரசியல் போராட்டத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டபூர்வமான ஏற்பாடு.

**கேள்வி - அப்படியென்றால் இது மிகப் பலவீனமான நிலை என்று எடுத்துக் கொள்ளலாமா?**

பதில் - நிச்சயமாக.

**கேள்வி - இலங்கை, இந்திய உடன்படிக்கை செய்யப்பட்டு 35 ஆண்டுகள் கடந்த பிறகும் 13 திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் பிரச்சி னைகள் உள்ளன. முன்பு புலி களுடைய போராட்டம் இருந்த சூழல் வேறு. யுத்தம் முடிந்த பிறகு 12 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தியா தொடர்ந்து 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தும்படி இலங்கையைக் கேட்கிறதே தவிர, அழுத்துவதாகத் தெரியவில்லையே. இந்த நிலையில் உங்களுடைய கோரிக்கை என்ன விளைவைத் தரும்?**

பதில் - இந்திய வெளியுறவுத்துறைச் செயலராக ஜெய்சங்கர் இருந்த போது சுரேஸ் பிரேமச்சந்திரன், அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டார், "இந்திய - இலங்கை உடன்படிக்கை இப்போதும் உயிருடன் இருக்கிறதா?" என. அதற்கு அவர் சொன்ன பதில் "இந்திய இலங்கை உடன்படிக்கை செய்யப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. அதற்குள் பல சம்பவங்கள் நடந்து விட்டன. ராஜீவ் காந்தியின் கொலை உள்பட. இதேவேளை நாங்கள் இலங்கை அரசிடம் 13 ஆவது திருத்தத்தைப் பற்றி வலியுறுத்துகிறபோது, இலங்கை அரசு கேட்கிறது, தமிழர்களே அதைப்பற்றி அக்கறைப்படவில்லை. நீங்கள் ஏன் இதைப்பற்றி அவ்வளவு அக்கறைப்படுகிறீர்கள்" என்று சொன்னார்.

தமிழர்களும் இந்தியாவிடம் ஒரு கோரிக்கையாக இதுவரை இதை வைத்தது கிடையாது. தனிப்பட்ட சந்திப்புகளில் இதைப்பற்றிப் பேசியுள்ளோமே தவிர, கூட்டாக இதை முன்வைக்கவில்லை.

இதற்கொரு காரணமும் இருந்தது, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பலரும் நம்பினார்கள் புலிகளின் போராட்டத்தினால் மாகாணசபைக்கு மேலான தீர்வு வரும் என்று எதிர்பார்த்தார்கள். அதனால் இந்தக் கோரிக்கைக்கான அவசியமோ சூழலோ ஏற்படவில்லை. இப்பொழுது நிலைமை வேறு.

**கேள்வி - நீங்கள் எழுதிய கடிதத்தில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறும் ஈ.பி. டி.பி போன்ற ஏனைய கட்சிகளை ஏன் இணைத்துக் கொள்ள முடியவில்லை?**

பதில் - டக்ளஸ் தேவானந்தா 13 திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்கிறார் என்று எங்களுக்குத் தெரியும். மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்தில் சுயாட்சி என்று அவருடைய கட்சியின் அறிவிப்பே உள்ளது. அதில் எங்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால், அவர் இப்பொழுது அரசாங்கத்தின் பிரதிநிதி. அமைச்சர். அப்படி இருந்து கொண்டு இன்னொரு அரசாங்கத்திடம் (இந்தியாவிடம்) கோரிக்கை வைக்க முடியாது. அது தர்க்க பூர்வமாக இருக்காதே. அவர் தன்னுடைய அமைச்சரவையில் அதைப்பற்றிப் பேச வேண்டும். அங்கே அழுத்தம் கொடுக்க வேண்டும். அதுதான் சரியானது.

**கேள்வி - இதேவேளை இன்னொரு தரப்பினர் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் - மாகாணசபை முறைமையைத் தாங்கள் ஏற்க வில்லை. இந்தக் கடிதம் ஒரு பயனற்றது என்ற விதமாகப் பேசுகிறார்களே. இது மறைமுக மாக மாகாணசபை முறைமை யைப் பலவீனப்படுத்தி, 13 ஐ ரத்துச் செய்கின்ற இலங்கை அரசாங் கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்து ழைப்பதாக இருக்கிறதல்லவா!**

பதில் - நாங்கள் 13 திருத்தம்தான் இறுதித்தீர்வு என்று சொல்லவில்லை. ஆனால், இப்பொழுது சட்டபூர்வமாக உள்ள ஒரே ஏற்பாடு இது மட்டும்தான். அதனால்தான் இதைப் பலவீனப்படுத்த வேண்டும். இல்லாதொழிக்க வேண்டும் என்று சிங்களத் தரப்பு தொடர்ந்து முயற்சிக்கிறது. இதை நாம் ஆழமாக - சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இருப்பதைக் கைவிட முடியாது.

எங்களுக்கும் இதற்கு மேலான தீர்வுக்கு விருப்பம்தான். எங்களுடைய நிலைப்பாடும் அதுதான்.

கஜேந்திகுமார் சொல்லும் ஒரு நாடு இரு தேசம் என்பதை, அதை அவர் எடுப்பதற்கான வழிமுறையைப் பற்றிச் சொல்ல வேண்டும். அவர் அதை நிச்சயமாக எடுப்பார் என்றால் அதற்கு நாம் எமது ஆதரவைக் கொடுப்போம். அதில் ஒரு பிரச்சினையுமில்லை.

நாங்கள் எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம், சமஸ்டிதான் எமக்கான தீர்வாகும் என.

**கேள்வி - நீங்கள் இந்தியப்பிரதமருக்கு எழுதிய கடிதம் உடனடியாக என்ன விளைவுகளை உண்டாக்கும் என எதிர்பார்க்கலாம்?**

பதில் - உடனடியாக எந்தப் பெரிய மாற்றமும் நிகழும் என்று சொல்ல முடியாது. ஆனால் இந்தியா மெல்லமெல்ல சில அழுத்தங்களைக் கொடுக்க முற்படக் கூடிய சூழல் உண்டு. ராஜதந்திர அழுத்தம், பொருளாதார அழுத்தம் என்ற வகையில். இப்பொழுது அதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளது.

உண்மையில் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியப்பிரதமருக்கான அந்தக் கடிதத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கையெழுத்துப் போட்டிருந்தால் தமிழ்த்தரப்பு முழுமையாக ஒன்று பட்டு நிற்கிறது என்பதை உணர்த்தியிருக்க முடியும். அதற்கான பெறுமதியும் கூடியிருக்கும். ஆனால் அவர் வேறு வழியில், தான் நிற்பதுதான் சரியென்று நிற்கிறார். அது வேறு விசயம். ஆனால், இப் பொழுதுகூட இந்தக் கோரிக்கையை வலியுறுத்து வதற்கான வாய்ப்பு அவருக்கிருக்கிறது.

**கேள்வி - இப்பொழுது தமிழ்த் தரப்பும் இந்தியாவும் இணைந்து ஒரு கூட்டுப் பொறிமுறையில் இலங்கை இந்திய உடன்படிக்கையையும் 13 ஆவது திருத்தத்தையும் உயிர்ப்பூட்டுவதற்கு முயல்வதாக கொள்ள முடியுமா?**

பதில் - அப்படிச் சொல்ல முடியும். நீண்ட காலமாக இதற்கான சூழல் இருக்கவில்லை. இப்பொழுது அந்தச் சூழல் உருவாகியிருக்கிறது என்றே நம்புகிறேன்.

ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு இந்தியா தமிழரின் விசயத்தில் விலகி நின்றது உண்மை. இன்று அந்த நிலை மாறி உள்ளது என நினைக்கிறேன். எங்களுடைய கோரிக்கை பரபரப்பாகப் பேசப்பட்டு, நாங்கள் பல தடவை இந்தியத் தூதருடன் பேசி, கடிதம் எழுதி செய்த விசயமெல்லாம் இந்தியாவின் கரிசனையை மீள்நிலைப்படுத்தியுள்ளது என எண்ணுகிறேன்.

அதோடு இப்பொழுது இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் விரிவாக்கம், செல்வாக்கு போன்றவையெல்லாம் இந்தியா இலங்கையின் மீது கொள்ளக் கூடிய நடவடிக்கைகளை மாற்றியமைக்கும். இதை நமக்கான ஒரு நல்ல வாய்ப்பான சந்தர்ப்பமாக நாம் பார்க்கிறோம். வாய்ப்புகளைத் தவற விடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவேதான் நாம் இதில் கூடுதலான கரிசனையை விரைந்து காட்டுகிறோம்.

**கேள்வி - இந்தியாவின் அழுத்தம் எந்தளவுக்கு இருக்கும்?**

பதில் - அதை நாம் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. இந்தியா ஒரு பெரிய நாடு. அதற்கு எனத் தனியாக சில நலன் நோக்குகளும் பார்வைகளும் இருக்கும். எந்த நாடும் முதலில் தன்னுடைய நலனைத்தான் நோக்கும். அதில் தவறில்லை. அதற்குள் எமது நலனை எப்படிப் பொருத்திப் பார்ப்பது? எப்படி எடுத்துக் கொள்வது என்பது எங்களைப் பொறுத் தது.

ஆனால் இதைச் சிலர் தவறாகப் பார்க்கிறார்கள். அப்படிப் பார்த்துதான் நாம் பின்னடைவுகளைச் சந்தித்தோம். ஆகவே இதை இனியும் அப்படிப் பார்ப்பது தவறு. அவர்கள் தங்கள் நலனைப் பார்த்துக் கொள்வார்கள். நாம் நம்முடைய மக்களின் நலனைப் பார்த்துக் கொள்வோம். இரு தரப்பும் இணைந்து செய்யக் கூடியதைச் செய்து கொள்வோம்.

**கேள்வி - இந்திய அழுத்தமும் கரிசனையும் தொடர்ச்சியாக இருக்குமா? இலங் கையில் நடக்கும் ஆட்சி மாற்றங் களுக்கு ஏற்ப மாற்றமடையுமா?**

பதில் - அப்படி மாற்றமடைவதற்கான சாத்தியங்கள் இருக்கும். ராஜதந்திர நடவடிக்கைகள் அந்தந்த ஆட்சியின் குணவியல்புகளுக்கு அமைய நடப்பதுண்டு. இலங்கையில் கடும்போக்கு நிலவுமாக இருந்தால் இந்திய அழுத்தம் அதிகரிக்கும். அது நமக்கு பயனைக் கூடுதலாகத் தரும். கடந்த ரணில் ஆட்சியில் இருந்ததைப்போல நழுவல் தன்மையைக் கொண்ட மென்போக்கு நிலவுமாக இருந்தால் இந்தியாவின் அணுகுமுறையிலும் நடவடிக்கையிலும் அதற்கு ஏற்றமாதிரியான மென்போக்கு நிலை இருக்கும்.

இப்பொழுது உள்ள சூழல் நமக்கு வாய்ப்புத் தரக் கூடியது என்று நம்புகிறேன்.

**கேள்வி - இன்றைய பொருளாதார நெருக் கடிச் சூழலில் தமிழ் மக்கள் அரசி யல் நெருக்கடியும் என இரட்டை நெருக்கடியைச் சந்திக்க வேண்டி யுள்ளது. இதை எப்படிப் பார்க்கி றீர்கள்? இதற்கு என்ன செய்ய முடியும்?**

பதில் - இது தமிழ் மக்களுக்கு மிக நெருக்கடியான காலகட்டம். இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகிறது. எங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்துப் பேசுவதற்கோ போராடுவதற்கோ முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி நாடு முழுவதும் உள்ளது. இந்தச் சூழலில் நாம் அழுத்தம் கொடுப்பதை வேறு விதமாக காட்டக் கூடிய நிலை உண்டு. நாமும் எந்த நேரத்தில் எதைப் பேசுவது என்று சிந்திக்க வேண்டுமல்லவா.

இதை விட நாம் இன்று மிகப் பலவீனமான சமூகமாக, இனமாக இருக்கிறோம். நாம் மிகக் கஷ்டமான காலகட்டத்தில் இருக்கிறோம். இதை விட இப்போதுள்ள அரசு கூட மிகத் தீவிரமான கடும்போக்குடையது. ஆட்சியிலிருக்கும் தலைவரும் ஏனையவர்களும் யுத்தம் முடிந்துவிட்டதால் எல்லாமே சரியாகி விட்டன என்று கருதுகின்றவர்கள். அபிவிருத்தியைச் செய்து விட்டால் எல்லாமே சரியாகி விடும் என்று சிந்திப்பவர்கள். இவர்களுடன் எதைப் பேசமுடியும்?

**கேள்வி - மாகாணசபை முறையில் அதிகாரப் பகிர்வு என்பதில் வடக்குக் கிழக் கில் இரண்டு மாகாணங்கள் மட் டுமே உண்டு. ஏனைய ஏழும் சிங்களப்பகுதிகளுக்குரியவையே. ஆகவே அவர்களுக்குத்தானே இந்த மாகாணசபை முறைமை அதிக நன்மையைக் கொடுக்கிறது. இதைப்பற்றிச் சிங்களத்தரப்பின் மனநிலை என்னவாக உள்ளது?**

பதில் - அவர்கள் இதை வேறுவிதமாகவே பார்க்கிறார்கள். அங்குள்ள நடைமுறையும் வேறு. வடக்குக் கிழக்கு மாகாணசபைகள் இரண்டும் அரசாங்கத்துக்கு வெளியே உள்ள தரப்புகளால் ஆட்சி செய்யப்படுகின்றவை. மற்றவை அப்படியல்ல. அரசாங்கத்தோடு இணைந்து ஆட்சி செய்கின்றவை. ஆகவே அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாமே வேறாக சுமுகமாக இருக்கிறது. அப்படி இல்லை என்றாலும் அதைக் கேட்பதைத் தவிர்க்கின்றன. காரணம், ஆட்சியில் இருப்பது தமது தலைமை என்பதால் அதற்குச் சிரமம் கொடுக்கக் கூடாது என்று பணிந்து நடக்கிறார்கள். அது மட்டுமல்ல, மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் சிங்களப்பகுதிகளில் வேறுபட்டிருப்பவை. எதையும் செய்யக் கூடிய நிலையில் இருப்பவை. எனவே அவர்களைப் பொறுத்தவரை மாகாணசபைகளுக்கான அதிகாரப் பிரச்சினை என்பது ஒரு விவகாரமே இல்லை.

இன்னொரு விசயமும் இதில் உண்டு. இதில் எதிர்த்தரப்பு ஆட்சிக்கு வந்து விட்டால் தொடர்ந்து மாகாணசபையை இயக்க முடியாது. ஆகவே அதற்கான சட்டமூலம் பலமானதாக இருக்க வேண்டும் என்று ஆர்வம் காட்டுகின்றவர்களும் இருக்கிறார்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)



**THE THIMPU TALKS: 1985**
**Sinhala-Tamil conflict and the India factor**



at Thimpu: The two delegations, the Sri Lanka government's across the table.

திம்பு பேச்சுபாத்தை The failed Thimphu talks

# சமஷ்டியே எங்கள் இலக்கு!



(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அதற்கான கோரிக்கைகளை வைத்தும் இருக்கிறார்கள். கடந்த ஆட்சிக்காலத்தில் நான் பல முதலமைச்சர்களையும் மாகாணசபை உறுப்பினர்களையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பற்றிச் சிந்திப்பதில் ஆர்வமாக இருக்கிறார்கள். சட்டரீதியாக இதைச் செய்ய வேண்டும் என்று சரியான விருப்பத்தோடிருந்தார்கள்.

**கேள்வி - சமஸ்டியைத் தனிநாட்டுக்கான கோரிக்கையாகப் பார்ப்பதைப்போல மாகாணசபை முறையையும் பார்க்கின்ற போக்கு தென்பகுதியில் தென்படுகிறது. இந்தத் தவறான புரிதலை எப்படி சீராக்குவது?**

பதில் - இது ஒரு நடைமுறைப் பிரச்சினை - சிக்கல். முன்பு சொன்னதைப்போல வடகிழக்கில் ஆட்சியமைப்பது அரசாங்கத்துக்கு வெளியே, ஆளும் கட்சிக்கு வெளியே இருக்கும் தரப்பு என்பதால் அப்படியான ஒரு பார்வை உண்டு. அங்கே தெற்கில் அப்படியல்ல. அவர்கள் கதைத்துப் பேசி எதையும் செய்யக் கூடிய நிலையில் ஒரே தரப்பாக இருக்கிறார்கள்.

அங்கே மாகாணசபையை நாடாளுமன்றத்துக்கு துணையான ஒரு கட்டமைப்பாகப் பார்க்கிறார்கள். இங்கே வேறு தரப்பு, வேறு கோரிக்கைகள் என்று வருவதால் இதை வேறுவிதமாகப் பார்க்கிறார்கள்.

இங்கே ஒரு அடிப்படைப் பிரச்சினை இருக்கிறது. பரஸ்பரப் புரிதலில் உள்ள தவறு என்று அதைச் சொல்லலாம். ஒரு தடவை நான் உதய கம்மன்பிலவுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, அவர் சொன்னார், இந்தப் 13 ஆவது திருத்தத்தை நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் செயற்படுத்த வேண்டும். அடிப்படையில் உங்களுக்கு எங்களில் ஐமிச்சம். எங்களுக்கு உங்களில் ஐமிச்சம். ஆகவே இந்தப் 13ஐ நடைமுறைப்படுத்துவதில் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து முன்னேறலாம். இந்தப் பொலிஸ் பவர், காணி அதிகாரம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்காமல் மெல்ல மெல்ல அதை நோக்கி முன்னேறலாம்” என.

நான் வழக்கமாகச் சொல்வதைப்போல “Oh.. good first step” என்று சொல்லி விட்டேன். அவர் உடனே கேட்டார், “what is the second step? என்று.அடுத்தது என்றால் தமிழீழம், தனி நாடு என்ற மாதிரி யோசிக்கிறார்கள்.

இந்தளவுக்கு அச்ச உணர்வு, சிங்கள மக்களின் உளவியலில் பெருகியுள்ளது. இதுதான் சகல மட்டத்திலும் உண்டு. இது அவர்களுடைய தாம் சிறுபான்மை என்ற உள அச்சத்தின் வெளிப்பாடு. தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இந்தியா அவர்களுக்கு ஆதரவாகவே உள்ளது என்ற மாதிரி.

**கேள்வி - இந்தியாவிடம் தமிழர்கள் நெருங்க நெருங்க சிங்கள மக்களிடம் இந்த அச்சம் இன்னும் கூடுமே?**

பதில் - உண்மை. அதற்கு வாய்ப்புண்டு. ஆனால் எங்களுக்கு வேற என்ன வழி? ஏனென்றால் இந்தியாவைத் தவிர்த்தோ மீறியோ வேறு எந்த ஐரோப்பிய நாடும் இந்தப் பிரச்சினையில் தலையிடாது. அவர்கள் எங்களைச் சந்திக்கும்பேதெல்லாம் சொல்லுகின்ற ஒரு விசயம், இந்தியாவை மீறி தம்மால் எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாது என்பதே.

இதைக் கடந்து மேற்குலகம் எங்களுக்கு ஆதரவாக நிற்குமாக இருந்தால், அதற்கு அவர்கள் தயார்ப்படுவதென்றால் நாங்கள் பலமான, வளமான சமூகமாக இருக்க வேண்டும். பொருளாதார அடிப்படைகளில், இயற்கை வளங்களில், சனத்தொகைப் பெருக்கத்தில், யூதர்களைப் போல அறிவுத்துறையில் மேலோங்கியிருந்தால் அவர்களால் தவிர்க்க முடியாமல் எம்மை ஆதரிக்க வேண்டியிருக்கும்.

ஆனால், நாங்கள் அந்தளவுக்கு இல்லையே!

**கேள்வி - சர்வதேச அழுத்தத்தில் புலம்பெயர் சமூகத்தின் செல்வாக்கு எந்தளவுக்குள்ளது?**

பதில் - அதுவும் அப்படித்தான். எங்களிற் சிலர் இதைச் சற்று மிகைப்படுத்திச் சொல்லுகிறார்கள். மேற்குலகம் நமக்குச் சார்பாக நிற்கிறது என. அது ஒரு பொய் அல்லது தவ-றான மதிப்பீடு. சிலவேளை இந்தச் செல்வாக்குச் சில நாடுக-ளில் ஒரு சிறிய அளவிலான கரிசனையை உண்டாக்குமே தவிர, பெரிய மாற்றத்தை - இந்தியாவை மீறி முடிவெடுக்கும் அளவுக்கு உண்டாக்காது.

ஒரு உதாரணத்தைச் சொல்ல வேணும். இதை நான் முன்பும் சில இடங்களில் சொல்லியிருக்கிறேன். ஒரு-தடவை முன்னாள் அமைச்சர் ரொனி டி மெல்லுடன் பேசிக் கொண்டிருக்கும்போது, அவர் கேட்டார், “இலங்கை இந்திய உடன்படிக்கை எப்படி வந்தது என்று தெரியுமா?” என்று.

“இல்லை. சொல்லுங்கள்” என்றேன்.

“இலங்கையின் வான்பரப்பிற்குள் இந்திய விமானங்கள் மீறி வந்துள்ளன என்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரொனால்ட் றீகனிடம் ஜே.ஆர். கேட்டார். அதற்கு றீகன், ராஜீவ் காந்தி என்னுடைய மிக நல்ல நண்பர் என்றார். இதோடுதான் இந்தியாவைப் பகைத்துப் பயனில்லை என்று ஜே.ஆர் உடன்படிக்கைக்குச் சம்மதித்தார். இந்த நிகழ்ச்சிகளுடன் நேரில் சம்மந்தப்பட்டவன் என்ற வகையில் சொல்கிறேன்” என்றார் டி மெல்.

பாருங்கள் இதுதான் யதார்த்தம்.

அமெரிக்கா எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தியாவை மீறி-யோ விட்டு விட்டோ எந்தத் தீர்மானத்தையும் எடுக்காது.

**கேள்வி - இன்றைய அரசாங்கத்தை, அதன் போக்கை கட்டுப்படுத்தக் கூடிய சூழல் உண்டா? பொருளாதார நெருக்கடி என்ன விளைவுகளை உண்டாக்கப்போகிறது?**

பதில் - பலமான எதிர்ப்புகளோ எதிர்க்கட்சியோ இல்லை என்பது துயரமான ஒரு நிலையே. யாராவது கேள்வி கேட்டாலும் அதைப் பொருட்படுத்தும் அரசு அல்ல இது. இதேவேளை இந்தப் பொருளாதார நெருக்கடி, கொரோன நோய் நெருக்கடி போன்றவற்றையெல்லாம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது.

**கேள்வி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்வதில் என்ன பிரச்சினை?**

பதில் - தமிழரசுக் கட்சிதான் பிரச்சினை. அவர்கள்தான் பிடிவாதமாக மறுக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கும் எங்களுக்கும் கடந்த தேர்தலில் ஒரு உறுப்பினர்தான் வேறு-பாடு. அந்தளவுக்கு நாம் பலமாக இருக்கிறோம். அண்மையில் அரசியலுக்குள் வந்த தமிழரசுக் கட்சியினருக்கு இந்த அரசியல் குறித்தோ ஒற்றுமையைக் குறித்தோ கவலைகள் இல்லை. அவர்களுக்கு இது வாழ்க்கை இல்லை. எங்களுக்கு கடந்த நாற்பது, ஐம்பது ஆண்டுகளாக இதுதான் வாழ்க்கை.

மாற்றுத் தீர்வாக நாங்கள் தமிழரசுக் கட்சியை விட்டு தனியாக ஒரு பதிவைச் செய்யலாம். அதற்கான இன்றைய சூழல் அதற்குப் பொருத்தமானதல்ல. காரணம், இப்பொழுது இந்த அரசாங்கத்தையும் இன்றைய அரசியற் சூழலையும் எதிர்கொள்வதற்கு ஒற்றுமையான ஒரு தரப்பு - பலமான தரப்பே தேவை. இந்த இடத்தில் நாம் பிரிந்து செல்வது தமிழர்களுடைய அரசியலைப் பலவீனப்படுத்தி விடும்.

இங்கே ஒன்றைச் சொல்ல வேண்டும். எங்களை மட்டுமல்ல, புலிகளின் ஆட்கள் என்று சொல்லப்பட்டவர்களையும் தமிழரசுக் கட்சி களைந்து விட்டது. இதை அப்பொழுது பலரும் புரிந்து கொள்ளத் தவறினார்கள்.

தேர்தல் மேடைகளில் புலிகளை ஆதரிப்பதும் பதவிகளில், அதிகாரத்தில் புலிகளை நிராகரிப்பதாகவுமே தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் உள்ளன.

**கேள்வி - எதிர்காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எப்படி இருக்கும்? குறிப்பாக சம்பந்தனுடைய காலத்துக்குப் பின்?**

பதில் - அதற்குப் பிறகு என்ன நடக்கும் என்று தெரியாது. ஆனால், கூட்டமைப்பு ஒரு கட்டமைப்பாக இருப்பதற்கு சம்பந்தன்தான் காரணம். அவருடைய சரி, தவறுகளுக்கு அப்பால் அந்த ஆளுமை அவரிடமே உண்டு. அவருடைய முதிர்ச்சியும் அனுபவமும் அப்படி.

# ஆரம்பித்த நோக்கங்களின் வழி இயங்குகின்றனவா சங்கங்கள் - மன்றங்கள்?

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகள் பலவாயிருந்தாலும் தற்போது ஓடும் ஓட்டம் கல்விக்கு உதவுகிறோம், சாப்பாடு கொடுக்கிறோம், வீடு கட்டிக்கொடுக்கிறோம் எனும் ஒரே வகையான செயற்பாடுகளே. இவற்றினைச் செய்வது பிழையல்ல சிறந்தவையே ஆனாலும் அந்தந்த அமைப்பு தொடங்கிய நோக்கத்தினை விட்டு வேறுவழியில் செலவு செய்வது சரியா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

ஆகவே நாங்கள் நீண்டதூரப் பார்வையில் எங்கள் சமய, அறிவியல், மருத்துவம், பண்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு துணைநிற்கும் சங்கங்களை அடையாளம் கண்டு அவர்களை, அவர்களின் நோக்கங்களின் வழி நிற்கின்றார்களா என்று ஆராய்ந்து அவர்களுக்கு உங்களாலான உதவி-களை செய்ய முன்வரவேண்டும். அத்துடன் அவர்களிடம் இந்த சங்கத்தின் நோக்கங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பொறிமுறை பற்றியும் வினவவேண்டும். புலம்பெயர் நாடுகளில் மட்டுமல்ல இலங்கையில் உள்ள பொது அமைப்புகளிடமும் இந்தக் கேள்விகளை கேட்டு அவர்களுக்கு உதவுவோமானால் நிச்சயம் ஒரு தூரநோக்குச் சிந்தனையும் தன்னிகரில்லாத் தலைமைத்துவமும் கொண்ட தமிழ் சமுதாயத்தினை உருவாக்கமுடியும்.

# ப்ளூ மௌண்டனின் மகுடம் எழிலரசி லியூரா

நெ செ பரத்



என்னவென்று சொல்வதம்மா லியூரா உந்தன் பேரழகை" என முணுமுணுக்க வைத்தது லியூரா ரயில் நிலையத்தில் இறங்கியவுடன் நாம் கண்ட காட்சிகள்.

சிட்னிக்கு மேற்கே சுமார் 100 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பிரபல சுற்றுலா தலமான "ப்ளூ மௌண்டைன்ஸ்" மலை தொடரில் அமைந்திருக்கும் ஒரு அழகிய கிராமம் "லியூரா".

பொதுவாக சிட்னியிலிருந்து ரயிலில் ப்ளூ மௌண்டைன்ஸ் செல்வோர் "கடூம்பா" என்னும் ரயில் நிலையத்தில் இறங்கி செல்வது வழக்கம், அந்த கடூம்பா ரயில் நிலையத்திற்கு முன் வரும் நிலையம் லியூரா.

அழகிய பூந்தோட்டங்கள், அருவிகள், எளிய வாழ்வியல் என ஒய்யாரமாய் திகழும் லியூரா ஒரு எழிலரசி தான். சுமார் 5000 பேர்கள் மட்டுமே வாழும் இடமான இந்த லியூரா சுற்றுலா பயணிகளால் பெரிதும் கவரப் படுகின்றது.

ரயில் நிலையத்தில் இருந்து வெளியே வந்தவுடன் ஒரு ரம்யமான சாலை நம்மை வரவேற்றது, அதன் பெயர் லியூரா வணிக வளாக சாலை. (நம்ம ஊரு கடைத்தெரு போல) சாலையின் நடுப்புறத்தில் மரம் செடிகளின் அணிவகுப்பும் அதன் மேல் அசைந்தாடும் பூக்களும், சாலையின் இரு புறங்களிலும் உணவு விடுதிகள், சிறிய கடைகள் என பார்த்த மாத்திரத்தில் நமக்கு பிடித்துப்போனது இந்த கடை தெரு. ஆஸ்திரேலியாவில் நாம் காணாத வணிக வளாகங்களா? என எண்ணலாம் ஆனால் வணிகம் மட்டுமன்றி அங்கே வாஞ்சையும் இருக்கிறது. தோழமை, தங்கள் ஊரை பற்றி சுற்றுலா பயணிகள் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கும் பாங்கு என எங்களுக்கு அவை யாவுமே ஈரம் மாறாத தமிழ் மணத்தின் நீட்சியாகவே தோன்றியது

மதிய வேளை என்பதால் உணவை அருந்திவிட்டு ஊரை சுற்றுவோம் என முடிவு செய்து அங்கிருந்த உணவகத்தில் கோழி இறைச்சியால் ஆன "பய்" எனும் திண்பண்டத்தை உண்டோம். அதீத வெண்ணையும், ஆங்காங்கே இறைச்சியுடன் உருளை கிழங்கு துண்டுகளும் பசிக்கு மட்டுமன்றி ருசிக்கும் விருந்தாய் அமைந்தன. இது போன்ற மலை பகுதிகளில் வாழும் மக்கள் குளிரில் தங்களை இதமாக வைத்துக்கொள்ள இயற்கையாகவே உஷ்ணத்தை அளிக்க கூடிய வெண்ணை, உருளை, இறைச்சி வகைகளை உண்பது வழக்கம். அதை நாமும் இன்று அனுபவித்தோம் . இந்த உணவகத்தின் மேலுமொரு சிறப்பு அதன் கண்ணாடி சுவர் வழியே நாம் கண்ட ப்ளூா மௌண்டைன் மலை தொடரின் காட்சிகள் தான்.

உணவை முடித்து ஊரை சுற்ற புறப்பட்டோம். அந்த கடை வீதி நெடுகிலும் "மியூவுறல்" வகை ஓவியங்களை காண முடிந்தது. 1917-இல் தொடங்கப்பட்ட தொன்மையான ஒரு தபால் நிலையம் கண்ணில்பட்டது. இக்காலத்தில் இதன் பெரும் பகுதி உணவகமாக செயல்பட்டு கொண்டு வருகிறது. நாம் வசந்த காலத்தில் வந்திருந்தால் லியூரா பூந்தோட்ட திருவிழாவையும் கண்டு களித்திருக்கலாம் என்றார் நண்பர் ஒருவர்.

கடல் மட்டத்திலிருந்து 3,232 அடி உயரத்தில் உள்ள லியூரா வில் குளிர் மிகுந்த காலத்தில் எப்போதாவது பனி மழை பொழியும். (நல்ல வேளை இன்றைய குளிர் நம்மால் தாங்கமுடிந்தது!)

எந்த இடத்திற்கு சென்றாலும் அவ்விடத்தின் தொன்மையை அறிவது சுவாரசியம் தான். 12,000 ஆண்டு காலமாய் இந்த பகுதி தாருக் இன மக்களின் வாழ்வாதாரமாய் இருந்தது என்பது வரலாறு. அம்மக்களின் சுவடுக-ளானா கல் மீதான ஓவியங்களை இன்றும் லியூராவை ஒட்டிய வனப்பகுதிகளில் காணலாம் என்றது இணையம். பிற்காலத்தில் 1867-68 ஆண்டில் மேற்கு ரயில் பாதை அமைக்கும் பனி தொடங்கி, அங்கே ரயில்வே கேட் பராமரிக்கும் ஊழியர்கள் தான் முதன் முதலில் இங்கே நிரந்தரமாக குடி பெயர்ந்தனர். பின்னர் 1800 களில் லியூரா வில் உள்ள ஜேமிசன் பள்ளத்தாக்கில் நிலக்கரி சுரங்க பணி களை மேற்கொள்ள வந்த ஊழியர்கள் பெருமளவில் குடி-யேறினர். 1881-இல் தான் இந்த பகுதி அதிகாரபூர்வமாக லியூரா என்னும் பெயர் பெற்றது என்பது வரலாறு. (பெயர் காரணம் யாருக்கும் புலப்படவில்லை !)

அடுத்ததாக நாம் காணவிருந்த இடம் லியூராவின் மிக முக்கிய "லியூரா அருவி" (லியூரா கேஸ்கேட்ஸ்). கடை தெருவில் இருந்து சுமார் 20 நிமிடம் நடந்து செல்ல கூடிய இடம் தான் இந்த லியூரா அருவி. 5 நிமிடங்கள் நடந்த உடனேயே வன பகுதியில் நுழைந்தோம். தொடர்ந்து செல்ல, பச்சை பசேல் என எங்கு பார்த்தாலும் மரங்கள் தான். பறவைகளின் ஓசை, செல் போன் நச்சரிப்பை சற்றே பின்னுக்கு தள்ளியது.

கரடு முரடான பாதையில் நடந்த எல்லா களைப்பும் இயற்கை பேரெழிலால் இளைப்பாற்றப்பட்டது. மெதுவாக அருவியின் சத்தம் காதுகளை எட்டியது. லியூரா அருவி "மேலருவி" (அப்பர் கேஸ்கேட்ஸ்), "பிரதான அருவி" என்று இரு பாகங்களாய் பிரிக்க பட்டவை. ஒரு சின்ன தொங்கும் பாலத்தில் நடந்து முதலில் மேலருவியை கண்டு விட்டு பின் கீழே செல்லும் படிக்கட்டுகளில் இறங்கி பிரதான அருவிக்கு செல்லலாம் என திட்டமிட்டோம். பாலத்தில் ஏறி நடக்கையில் தொலைவில் இருந்தே இந்த மேலருவி நம் மனதில் மகிழ்ச்சியை விதைத்தது. அடுக்கு பாறைகளில் மேல் குளிர்ந்த நீரானது கொட்டி தள்ளும் காட்சி அருமை. முதன்முதலாய் கால்கள் நீரில் பட இனம்புரியாத உற்சாகம் பற்றி கொண்டது. நம் மனதில் இருக்கும் கவலையை எல்லாம் இந்த தண்ணீர் தன்னோடு எடுத்து செல்வதை உணர்ந்தோம். கால்களுக்கு அடியில் பாறைகள் பாதையாய் மாறின (குழந்தைகள் ஜாக்கிரதை !) சுற்றிலும் இறகு வடிவ தாவரங்கள் இந்த லியூரா மேலருவி யின் அணிகலனாக தோன்றின.

இதற்கிடையில் நம்மோடு வந்த நண்பர் இது வெறும் ஆரம்பம் தான், இன்னும் எழில் மிகு பிரதான அருவி கீழே நடந்து சென்றால் இருக்கு என்று கூட்டிச்சென்றார். சுமார் 400 மீட்டர் தூரம் படிக்கட்டுகளில் கீழே செல்ல, அந்த நாளின் முத்தாய்ப்பாய் பிரதான அருவி தென்பட்டது. மேலரு வியை விட அளவில் பெரியதுமாய் , அழகில் சிறந்ததுமாய் இருந்தது. அடுக்கு பாறைகள் வழியே தண்ணீர் விழும் ஓசை இசையாய் அமைந்தது. நண்பர் ஒருவர் சொன்னார், தோழர் வாழ்க்கையும் இது போலத்தான் போராட்டங்கள் என்னும் பாறை தான் வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்க்கிறது. என்ன வந்த கொஞ்ச மணி நேரத்துலயே தத்துவம் லாம் பேசுறீங்க என்றார் வேறு ஒரு நண்பர் (சிரிப்புடன்).

என்ன சொன்னாலும் சரி, மௌனத்தில் விளையாடிய மனம், அருவியின் சங்கீதம் இரண்டும் பிணைந்து மனதை இலகுவாக்கியது. "இன்னும் கொஞ்ச நேரம் இருந்த தான் என்ன" என மனம் கேள்வி கேட்டாலும், இருட்டுவதற்குள் நடந்து லியூரா கிராமத்திற்கு செல்ல வேண்டுமே என்று நாங்கள் நடையை கட்டினோம்.

மன அழுத்தத்திற்கு ஆகச்சிறந்த தீர்வு மனிதன் சற்று நேரம் இயற்கையுடன் இணைவது தான் என்ற புரிதலை எமக்கு லியூரா அருவி உணர்த்தியது.

பயணம் இன்னும் தொடர்வதால்.. பகிர இன்னும் இருக்குது..

**தொடரும்...**






தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

ஜெரா

# எங்கு பாரினும் வெறுமையடா

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் பிரதேசத்தில் உள்ள கிராமமொன்றில் இந்தச் சம்பவம் நடந்தது.

வயதான பெண்ணொருவர் சந்தைக்குச் சென்றார். கறிக்கு மீன் வாங்கிக்கொண்டு, தன் வீட்டுக்குப் போகும் ஒழுங்கை வழியே நடந்துகொண்டிருந்தார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் பெண்ணை வழிமறித்தனர். நலம் விசாரித்தனர். வயதான பெண்ணும், "தெரிஞ்ச பெடியளாக்கும்" என்று பதில் சொல்லிக்கொண்டிருந்தார். மீன் விலையேற்றம், மரக்கறி



விலையேற்றம் பற்றியெல்லாம் புலம்பிய வயதானவர்,

அன்றைய தினம் சந்தைக்குத் தான் கொண்டு வந்த பணத்தின் அளவையும் உலறினார். அந்தநேரத்தைக் குறிவைத்துப் பெண்ணிடமிருந்த காசுப் பையை மோட்டார் சைக்கிளில் நின்றிருந்த இளைஞர் ஒருவர் பறித்துக்கொண்டார். சோதனை போட்டார். அந்தப் பணப்பையோ, இலங்கை மத்திய வங்கியைப் போன்றிருந்தது.

"எங்க காசு..காசை எடு..வேகமாக எடு" என மிரட்டினர்.

"நான் 500 ரூபாதான் கொண்டு வந்தனான். அதுக்கு மீன் வாங்கிற்றன். என்னட்ட வேற காசில்லை தம்பியவ" என அப்பெண் அழுதிருக்கிறார்.


"சரி, பறவாயில்லை. மீனைத் தா" எனச் சொல்லி, அவரிடமிருந்த அரை கிலோ சுவாப்பாரையையும், கால் கிலோ பால் நெத்தலியையும் பறித்துக்கொண்டு பறந்தனர் அந்தத் திருட்டு இளைஞர்கள்.

இதுவேதான் நாட்டின் நிலைமை. என்றுமில்லாத வகையில் திருட்டுக்கள் தலைதூக்கியிருக்கின்றன. முன்பெல்லாம் நகையை, பணத்தை, பெறுமதியான பொருட்களே திருடர்களின் இலக்காக இருந்தது. இப்போது இலங்கைத் திருநாட்டில் எப்பொருளுக்கும் பாதுகாப்பில்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது.

நவீனமயப்பட்ட பாதுகாப்புடன் இருந்தும் ஆறுமாத கால இடைவெளிக்குள் ஒரே வீட்டில் மூன்று தடவைகள் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அந்தளவுக்கு வறுமை மக்களைப் பீடித்திருக்கிறது. எல்லோரின் கஜானாக்களும் காலியாகியிருக்கிறது.

## செயலிழந்துள்ள அரசக் கட்டமைப்பு

இவ்வாறு வறுமை தலைதூக்க கோட்டா அரசாங்கம் பின்பற்றும் தவறான கொள்கைகளே பிரதான காரணம் எனச் சொல்லப்படுகிறது. கொரோனாவை வைத்து அரசியல் ஆதாயம் தேடத்தொடங்கியதன் விளைவாக, பொருளாதாரத் தளங்களில் முன்னெச்சரிக்கையுடனான அனுகுமுறைகளைப் பின்பற்றத் தவறிவிட்டனர். சமநேரத்தில் ராஜபக்சக்களின் அடையாளங்களில் ஒன்றாகிய கொள்ளையடிப்புக்களுக்கும், குற்றவாளிகளுக்கான வெள்ளையடிப்புக்களுக்கும் பஞ்சமிருக்கவில்லை. இதனால் 180 நாடுகளை உள்ளடக்கிய ஊழல் தொடர்பான தரப்படுத்தலில் இலங்கைக்கு 102




ஆவது இடமும் கிடைத்திருக்கிறது.

தென்னாசியாவிலேயே சனத்தொகைக்கு அமைவாக உள்ளூர் விவசாய உற்பத்திகளால் தன்னிறைவைக் காணக்கூடிய நாடு இலங்கை என்ற பெருமையை வரலாறு முழுவதும் பெற்றிருந்தது. இராஜபக்சக்களின் மீள்வருகையோடு அந்தப் பெருமையும் பறிபோனது. நிதிநெருக்கடியால் விவசாய உரம், இரசாயன மருந்துகளின் இறக்குமதியை நிறுத்திவிட்டு, நாட்டின் அனைத்து விவசாயிகளையும் இயற்கை விவசாயத்துக்கு ஒரே இரவில் தாவுமாறு அரசு உத்தரவிட்டது. பொருளாதார ரீதியில் வளர்ந்து நிற்கும் அவுஸ்திரேலியாவிலேயே மொத்த விவசாய நிலத்தில் 8.8 வீத நிலத்தில்தான் இயற்கை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. தொட்ட காரியம் - தொடாத காரியம் வரை அனைத்திற்கும் கடனில் காலம் கடத்தும் இலங்கை அரசு ஒரே இரவில் இயற்கை விவசாயத்திற்கு தாவச்சொன்னதும், உள்ளூர் உற்பத்தி மொத்தமாக விழுந்துவிட்டது. 120 ரூபாய்க்கு குறைவாக எந்த அரிசியும் வாங்கமுடியாத நிலை அரசினாலேயே ஏற்படுத்தப்பட்டது. மறுபுறத்தில் பண மதிப்பிழப்போ, 5000 ரூபாய்க்கு சொப்பிங் பையளவுக்கு பொருட்கள் வாங்குமளவுக்கு வளர்ந்து நிற்கிறது. இதனால் இலங்கைத் திருநாட்டின் மொத்த சனத்தொகையில் முக்கால் வாசிக்குமேல் வாழும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மக்களுக்குத் திருடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது.

## திருடுவதற்கும் ஏதுமுண்டா?

அதற்கும் ஏதுமில்லை என்ற நிலைதான் தலைவிரித்தாடுகிறது. எத்தனையோ விதமான சலுகைகளை - விளம்பரங்களை வழங்கியும் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதைத் தவிர்க்கிறார்கள். ஈஸ்ரர் தினத் தாக்குதல்களையடுத்து இந்நிலமை உருவாகியிருக்கிறது. எனவே அந்நியச் செலாவணி குறைய கையிருப்பில் இருந்த டொலரும் குறைந்தது. அரசு அத்தியாவசியமற்ற 600 பொருட்களை இறக்குமதி செய்வதைத் தடைசெய்தது. இதன் ஊடாகப் பெருமளவு அந்நிய செலுத்துகை நிதி மிச்சப்படும் என நம்பியது. ஆனால் அத்தியாவசிய பொருட்களான எரிவாயு தொடக்கம் எரிபொருள் வரை இறக்குமதி செய்வதில் சிக்கல் உருவாகியிருக்கிறது. நாடு முழுவதும் வாகனங்கள் எரிபொருளின்றி வரிசையில் நிற்கின்றன. அத்தியாவசிய மருந்துகளைப் பெறுவதில் கூட சிரமம் ஏற்பட்டுள்ளது. மருந்துக்குக்கூட பனடோ



லைப் பெற முடியவில்லை.

குண்டூசி தொடக்கம் கூனிச் சாக்குவரை விலையேற்றம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு சமனான முறையில் விலையேற்றம் இடம்பெறவில்லை.

ஒரே வரிசையில் இருக்கும் ஊசிகளுக்கான கடைத் தொகுதியில் முதல் கடையில் குண்டூசி ஒன்றின் விலை ஒரு ரூபாய் என்றால், அதே வரிசையில் இருக்கும் பத்தாவது கடையில் அதே குண்டூசி ஒன்றின் விலை பத்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அனைத்துப் பொருட்களுக்கும் விலைத்தளம்பல் நீடிக்கிறது. விலைக்கட்டுப்பாடு, விலை நிர்ணயம் என அரசு போடவேண்டிய அத்தனை கட்டுப்பாடுகளையும் எந்த வியாபாரியும் கணக்கில் எடுப்பதில்லை. தாம் நினைப்பதே விலை. யாரவது விஜயகாந் பாணியில் இதனைத் தட்டிக்கேட்க களமிறங்குவாராயின், வெறும்பையுடன்தான் வீடு திரும்பவேண்டிவரும். அந்தளவுக்கு பொருள் பதுக்கலும் இடம்பெறுகிறது. அரச பெற்றோல் நிலையத்தில் டீசல் இல்லை என அறிவிப்புப் பலகை மாட்டியிருக்கும் சமநேரத்தில், அதே நிலையத்திற்கு முன்னால் உள்ள ஓயில் கடையில், லீற்றர் 300 ரூபாய்க்கு டீசல் கிடைக்கிறது. இது இலங்கையின் ஒரு பிராந்தியத்திற்கு மட்டுமான நிலையல்ல. காலி தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் இதுவேதான் நிலை.

## அரசு என்ன செய்கிறது?



அரசு தன் கொள்கைகளைத் திருத்திக்கொள்ள நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. கண்ணாடியைத் திருப்பினால் ஆட்டோ ஓடும் என்ற கணக்கில் அமைச்சர்களை மாற்றிக்கொண்டிருக்கிறது. மஹிந்த இராஜபக்சவிடமிருந்த நிதியமைச்சுப் பதவியைப் பிடுங்கி, ஏழு மூளைகாரரான பசில் இராஜபக்சவிடம் கொடுத்து நிதிச் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறது. இது அப்பா திருடனிமிருந்த கஜானா சாவியை வாங்கி பெரியப்பா திருடனிடம் ஒப்படைத்த கதையாகிவிட்டது. இப்போது யாரெல்லாம் பசில் ராஜபக்சவை ஏழு மூளைகாரர் என முழங்கினார்களோ, யாரெல்லம் "I AM BACK" என பதாகை ஒட்டினார்களோ, அவர்களெல்லாம் பசிலுக்கு ஒரு மூளையும் இல்லை என்கின்றனர். ஓர் அமெரிக்கர் எங்கள் நாட்டை அழித்துக்கொண்டிருக்கிறார் என்கின்றனர். ஆனால் இந்த விமர்சனங்களை ஏற்காத அரசு விமர்சிப்பவர்களை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு ஆமாம் சாமிகளை அமைச்சர்களாக்கிக்கொண்டிருக்கிறது. எவ்விதமான நிதிசார் சீர்திருத்தங்களுக்கும் அரசு தயாரில்லை. மாற்றங்களுக்கும் தயாரில்லை.

மறுபுறத்தில், என்றுமில்லாத இடரை எதிர்கொண்டிருக்கும் சிங்கள மக்கள் தமக்கான புதிய தலைவரைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். துரதிஸ்டம் என்னவெனில் சிங்கள மக்கள் எதிர்பார்க்கும் இராஜ கவர்ச்சியுடன் கூடிய தலைமைத்துவம், சஜித்திடமோ, அனுரகுமாரவிடமோ, ரணிலிடமோ, மைத்திரியிடமோ இல்லவேயில்லை என்கின்றனர். தம்மை ஆட்சி செய்ய துட்டகாமினி அரசரைப் போன்ற ஒருவர் வேண்டுமென்கின்றனர். ஆனால் அவர்களின் துரதிஸ்டம், ஒரு 'பட்ட'காமினி கூட இராஜபக்ச குடும்பத்தைத் தாண்டி வெளியில் இல்லை.



# ரஷ்யா-உக்ரைன்

# மோதல் மனித குலத்துக்கு எதிரானது

அ.முத்துக்கிருஷ்ணன்

உக்ரைன் மீது ரஷ்யா தனது படையெடுப்பைத் தொடங்கியது முதல் இந்த விவகாரம் பற்றி பெரும் உரையாடல் எழுந்துள்ளது. உக்ரைனின் முக்கிய நகரங்களுள் ரஷ்யப் படைகள் நுழைந்துள்ளன, ஒவ்வொரு நகரமாக அவர்கள் கைப்பற்றி வரும் சூழலில் கிழக்கு ஐரோப்பா முழுமையிலும் ஒரு பதற்றம் நிலவி வருகிறது.

ரஷ்யா தனது போரைத் தொடங்கியதிலிருந்து மேற்கத்திய ஊடகங்கள் போர், போர் என்று பெரும் ஓலமிட்டு வருகின்றன. நிச்சயம் இந்த போர் கண்டிக்கத்தக்கது தான், போர்கள், வன்முறை மனித பண்புகளுக்கு எதிரானவை. போர்களால் பெரிதும் பாதிக்கப்படுவது, கொல்லப்படுவது எளிய மக்களே என்பதை உலகம் முழுவதும் நடைபெற்ற போர்கள் நமக்கு உணர்த்தியிருக்கின்றன. ஒவ்வொரு போரும் நமக்கு ஏராளமான பாடங்களைக் கற்பித்துள்ளன. ஆனால் ஒவ்வொரு வன்முறையும் போர்களையும் சர்வதேச ஊடகங்கள் எப்படிக் கையாள்கின்றன என்பது குறித்த கேள்விகளும் இந்த முறை துல்லியமாக எழும்பி வருகிறது.

இந்த போர் தொடங்கியது எனக்கு ஒரு போதும் ஆச்சரியத்தை அளிக்கவில்லை, ஏனெனில் ரஷ்ய-உக்ரைன் -நேட்டோ படைகள் என்கிற இந்த மூன்று புள்ளிகளைத் தொடர்ச்சியாகக் கவனிப்பவர்களுக்கு நிலைமை ஒரு போரை நோக்கியே சென்றது என்பதை யூகிக்க முடியும். நேட்டோ படைகளைத் தொடர்ந்து ரஷ்யாவின் கிழக்கு எல்லை முழுவதும் குவித்து வைத்திருக்கிறார்கள். நேட்டோவில் உக்ரைனை இணைப்பது தான் அமெரிக்காவின் திட்டம், அதற்கு ரஷ்யா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. நேட்டோவில் உக்ரைனை நிரந்தரமாக இணைக்கக் கூடாது என்றும் ரஷ்யா உறுதி கேட்டுவருகிறது.

ஆனால் தொடர்ச்சியாக உக்ரைன் நேட்டோ நோக்கிப் பயணிப்பதும், உக்ரைனை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தங்கள் வலையில் வீழ்த்த நினைப்பதுவும் தான் இந்த விவகாரத்தின் விதைந்து கிடக்கிறது.

நேட்டோ படைகளின் தொடர்ந்து விரிவாக்கமும் இந்த பகுதி முழுவதிலும் பதட்டத்தை ஏற்படுத்துவதற்கு அடிப்படைக் காரணம் என பாதுகாப்பு துறை வல்லுநர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகிறார்கள்.

நேட்டோ என்கிற வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு. அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் உள்பட 12 நாடுகள் சேர்ந்து 1949இல் இந்த ராணுவ கூட்டு அமைப்பை உருவாக்கின. நேட்டோ உருவான பின்பு 1955ல் ரஷ்யாவின் நட்பான கம்யூனிஸ்ட் நாடுகள் வார்சோ ஒப்பந்தத்தின் படி ஒரு ராணுவ கூட்டணியை உருவாக்கின. ரஷ்யா 1991ல் சிதறுண்ட பிறகு வார்சோ ஒப்பந்தத்தில் இருந்து நாடுகள் பல மெல்ல மெல்ல நேட்டோ கூட்டமைப்பில் இணைந்தன.

ஒவ்வொரு நாடும் இணையும் போது ரஷ்யாவின் கிழக்கு எல்லைப் பகுதி முழுவதும் நேட்டோ படைகளின் தளங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது உக்ரைனை நேட்டோவில் இணைத்து ரஷ்யாவின் தெற்கு பகுதியில் பெரும் ராணுவ முகாம்களை உருவாக்க அமெரிக்காவும் அதன் ஏவல் படையான நேட்டோவும் துடித்து வருகிறது. எப்படியேனும் ரஷ்யாவின் மீது ஒரு போர் தொடுக்க உக்ரைன் என்கிற புறவாசல் அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்றே அவர்கள் கருதுகிறார்கள். நேட்டோ கூட்டமைப்பு அமைதியை உருவாக்குகிறதா அல்லது இந்த உறுப்பு நாடுகளின் நலன்களுக்கான சூழலை மட்டுமே உருவாக்குகிறதா என்பதை விவாதிக்க வேண்டிய நேரமிது.

உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஸெலென்ஸ்கி நேட்டோவில் தனது நாட்டை இணைத்து விட வேண்டும் என்கிற தீவிர முடிவுடன் செயல்பட்டு வருகிறார். எப்படியேனும் உக்ரைனை இணைத்து விட வேண்டும் என்கிற அமெரிக்காவின் நோக்கம் தான் மெல்ல மெல்ல இந்த விவகாரத்தைப் போர் என்கிற தளத்திற்கு நகர்த்தியிருக்கிறது.

ரஷ்யா போரைத் தொடங்கியதும் சர்வதேச ஊடகங்கள் போட்ட பெரும் சத்தமும், வார்த்தை பிரயோகமும் இந்த முறை ஒரு சுற்று விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த முறை ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் ராணுவத்துடன் இணைந்து ஆயுதம் ஏந்தி போராடும் உக்ரைன் மக்களைச் சர்வதேச ஊடகங்கள் நாயகர்களாக, தாய் நாட்டை காக்கும் வீரர்களாகப் பாராட்டி வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளாகப் பாலஸ்தீனத்திலும், இலங்கையிலும், ஈராக்கிலும், ஆப்கானிலும், சிரியாவிலும் உலகின் பல பகுதிகளும் தங்களின் உரிமைகளைக் காக்க போராடுகிற அனைவரையும் இந்த சர்வதேச ஊடகங்கள் தீவிரவாதிகள் என்றே அழைத்து வந்தன. அமெரிக்காவின் நலன்களுக்கு ஆதரவாகப் போராடினால் நாயகர்கள், எதிராகப் போராடினால் தீவிரவாதிகளா??

அமெரிக்கா இதுவரை 140 முறை தன் சொந்த நாட்டின் மக்கள் மீதும், பிறநாடுகளின் மீதும் யுத்தங்களை கொண்டு பெரும் தாக்குதல்களை நடத்தியுள்ளது. வியட்நாம் தொடங்கி ஆப்கானிஸ்தான் வரை இப்படி பெரும் போர்களை நடத்தி அமெரிக்கா என்ன சாதித்தது என்பதையும் அமெரிக்க மக்கள் ஆலோசிக்க வேண்டும்.

ரஷ்ய படையெடுப்பு தவறு என்பதில் நமக்கு ஐயமில்லை ஆனால் ரஷ்யாவைக் கண்டிக்கும் அதே நேரம் நாம் நேட்டோ படைகளையும் அதன் விரிவாக்கத்தையும் கண்டிக்க வேண்டும், அப்படிக் கண்டிக்கவில்லை எனில் நாம் எங்கே தவறுகிறோம் அல்லது அமெரிக்கா செய்யும் சதிகளுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று பொருள்.

“எங்கும் செல்லாதீர்கள், நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருங்கள், பதற்றம் அடையாதீர்கள், உங்கள் நாடு உங்களை இங்கிருந்து பாதுகாப்பாக அப்புறப்படுத்தும். ஜெய் ஹிந்த்”- இது தான் தொடர்ச்சியாக இந்திய மாணவர்களுக்கு இந்தியத் தூதரகங்கள் மார்ச் 1, 2022 அதிகாலை 5.07 மணிக்கு அனுப்பிய செய்தி.

ஆனால் அதே மார்ச் 1, 2022 மதியம் இந்தியப் பிரஜைகள் மற்றும் மாணவர்கள் உடனடியாக உக்ரேனை விட்டு அதிரடியாக வெளியேறும் படி, கிடைக்கும் ரயில்கள் அல்லது வேறு ஏதேனும் ஒரு போக்குவரத்தில் உடனடியாக வெளியேறும் படி இந்தியத் தூதரகம் உத்தரவிடுகிறது. பிப்ரவரி முதல் வாரத்தில் ரஷ்யா தனது முழு படை பலத்தையும் உக்ரைன் எல்லைப் பகுதியில் அணிவகுத்து நிறுத்திய போது உலகே ஒரு எச்சரிக்கை மனநிலையை அடைந்தது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உடன் தங்களின் குடிமக்களை, மாணவர்களைத் தொடர்பு கொள்ளத் தொடங்கின.

கார்க்விக், க்விக், லுஹாஸ்க், தொனெஸ்க், கெர்சன் என ரஷ்யப் படைகள் உக்ரேனின் நகரங்கள் மீது தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. மக்கள் பாதாளத்தில் உள்ள மெட்ரோ ரயில் நிலையங்கள், வெடி குண்டுகளில் இருந்து தப்புவதற்கான பங்கர் குழிகளில் ஆயிரக்கணக்கில் பதுங்கத்தொடங்கினார்கள். சில தினங்களிலேயே அங்கே உணவு இல்லை தண்ணீர் இல்லை.

மார்ச் 1 அதிகாலை 6.30 மணிக்கு ஊரடங்கு முடிந்ததும் உணவு வாங்க வெளியே ஒரு ஷாப்பிங் செண்டர் நோக்கி வந்த இந்திய மாணவர் நவீன தனது இருப்பிடத்திற்கு திரும்பவில்லை. சக மாணவர்கள் தொடர்ந்து நவீனை தொடர்பு கொள்ள முயன்ற போது அவர் தொலைப்பேசி அழைப்பை எடுக்கவில்லை. பின்னர் ஒரு செவிலியர் தொலைபேசியை எடுத்து நவீனின் உடல் கார்க்கிவ் மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனை பிணவறையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

உக்ரேன் எங்கும் பதற்றம், குழப்பம். எந்த திசையில் ஷெல் குண்டுகள் வரும், எங்கிருந்து ராணுவ பீரங்கிகள் வரும் என்பதை யாராலும் கணிக்க முடியாது. உக்ரேனியர்களுடன் வாழ்வா சாவா என்கிற நிலையில் உலகம் முழுவதில் இருந்தும் அங்கே பயிலச் சென்ற மாணவர்களும் அகப்பட்டிருக்கிறார்கள்.

தாய்நாடு திரும்பிய வெறும் 800 பேரை பார்த்து அமைச்சர்கள் செல்பி எடுத்து மகிழ்ந்து வருகிறார்கள், இந்திய ஜனாதிபதி பிரதமர் மோடியின் முயற்சிகளுக்கு பெரும் பாராட்டுகள் தெரிவித்து வருகிறார். இந்த செய்திகள் உக்ரேனில் உள்ள 17200 மாணவர்களை அடைந்தால் அவர்களின் மனநிலை என்னவாக இருக்கும்.

போர் மனித குலத்திற்கே எதிரானது, ஆயுதங்கள் மனித குலத்திற்கே எதிரானவை, வன்முறை மனித குலத்திற்கே விரோதமானது என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்ல வேண்டும்.

# மெல்லக்கொல்லும் மன அழுத்தத்திலிருந்து மீள!

மன அழுத்தம், அவற்றின் வகைகள், அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை மற்றும் சிகிச்சை முறைமைகள் குறித்து சிட்னியில் உள்ள பிரபல மனநல வைத்தியர் ரைஸ் வழங்கும் விளக்கம்,

மன அழுத்தம் என சாதாரணமாகச் சொல்லப்படும் depression dpy; Recurrent depression, agitated depression, atypical depression, melancholic depression, chronic depression, dysthymia, Bipolar depression, Seasonal depression, Psychotic Depression,depression with Catatonia, post psychotic depression and organic depression, அப்படின்னு பல வகைகள் இருக்கின்றன. ஷ்ஷப்பா! இப்பவே கண்ணக் கட்டுதே!

**சில விளக்கங்கள்:**

Recurrent depression: திரும்ப திரும்ப ஏற்படும் மனஅழுத்த அத்தியாயம். அதாவது மன அழுத்தம் ஏற்படாத காலங்களில் எல்லோரையும் போல சகஜமான வாழ்க்கை வாழ்வர். வாழ்வில் ஏதாவது சங்கடம் எனும் தூண்டுதல் (trigger) வந்தால் மட்டும் மனஅழுத்தம் திரும்ப வர வாய்ப்பிருக்கிறது.

Agitated depression: மனஅழுத்தமும் மனப் பதட்டமும் ஒரு சேர இருப்பது. காலில் வெந்நீர் கொட்டியது போல் எப்போதும் ஒரு வகையான பதட்டத்துடனே இருப்பர்.

Atypical depression: பொதுவான மன அழுத்தம் போலில்லாமல் சில அறிகுறிகள் வேறுபடலாம். உதாரணமாக அதிக தூக்கம், அதிக பசி போன்ற அறிகுறிகள்

Melancholic depression: தீவிர வகையைச் சார்ந்த மனஅழுத்தம் இது. எந்த வித துண்டுதலும் (triggers) இல்லாமல் வரலாம். மிகவும் சோர்ந்து போய் இருப்பார்கள். ஆற்றல் இழந்த நிலை , உந்துதல் இல்லாத நிலை, வெற்றுப் பார்வையோடு முகம் முழுவதும் சோகம் அப்பி இருக்கும். நல்ல தூங்கினாலும் அதி காலையிலேயே விழிப்பு வந்துவிடும். காலை நேரம் நரகம் போல இருக்கும், ஆனால் நேரம் போக போக மாலையில் சற்று சகஜ நிலைக்கு வந்து விடுவர். மீண்டும் அதிகாலை விழிப்பு, காலை நேரம் கொடுமையாக இருக்கும். சிகிச்சையினால் இவர்கள் சற்று சரியான பிறகு, தற்கொலை எண்ணம் இருந்து ஆற்றல் மீண்டும் வந்தால் உடனே தற்கொலை முயற்சி செய்ய வாய்ப்பிருக்கிறது (அதாவது நோய் தீவிரமாக இருக்கும் போது தற்கொலை முயற்சி செய்யக் கூட அவர்களுக்கு உந்துதலும் ஆற்றலும் இருந்திருக்காது) எனவே முழு நிவாரணம் கிடைக்கும் வரை இவர்களைக் கண்காணிக்க வேண்டும்.

Chronic depression: நாட்பட்ட தொடர் மனஅழுத்தம். குணமாவதற்கு தடையாக சில விசயங்கள் இருக்கலாம். குடும்ப சூழ்நிலை,உடல் உபாதைகள், ஆளுமைக் கோளாறுகள்.

Dysthymia: இலேசான மிதமான மனஅழுத்தம் எப்போதுமே தொடர்ந்து இருப்பது. எப்ப பார்த்தாலும் ‘என்னத்தப் பண்ணி என்னத்தச் செய்ய’ என புலம்புவார்கள். மற்றபடி வேலை, குடும்ப வாழ்க்கையில் சகஜமாக இருப்பர் (சிறு பிரச்சனைகள் இருக்கலாம்)

Bipolar depression: இருமுனைப் பிறழ்வு நோயில் வரும் மன அழுத்தம். இதில் பொதுவாக Antidepressant எனும் மன அழுத்த மருந்துக்குப் பதிலாக Mood stabilisers எனும் மனநல சீர்படுத்திகளைத் தான் கொடுப்போம். ஏனென்றால் Antidepressant அவர்களை சடுதியில் mania எனும் மன எழுச்சி நோக்கி உந்தித் தள்ளிவிடும்.

Seasonal depression or seasonal Affective Disorder (SAD): சீதோஷ்ன நிலை மனஅழுத்தம். அதாவது குளிர் காலத்தில் மட்டும் தான் இவர்களுக்கு மன அழுத்தம் வரும். குளிர் காலம் முடிந்த பிறகு சகஜ நிலைக்கு வந்து விடுவர். இவர்களுக்கு மன அழுத்த மருந்தோடு light therapy எனப்படும் சதா வெளிச்சத்திலேயே இருத்தலும் மற்றும் Melatonin எனும் ஒரு வகை மருந்தும் கைகொடுக்கலாம்.

Psychotic depression or depression with psychotic features: இவர்களுக்கு மன அழுத்த அறிகுறியோடு சில வித்தியாசமான அறிகுறிகளும் இருக்கலாம். உதாரணமாக ‘எனது உடலில் குடல்களே இல்லை, அழுகிவிட்டன’, ‘நான் ஏதோ பெரிய தப்பு செய்துவிட்டேன், என்னால் தான் உலகில் சுனாமி ஏற்பட்டது’ ‘ நான் பரம ஏழையாகிவிட்டேன் (ஆனால் வங்கியில் பல கோடி இருக்கும்)’ என்பது போல தீவிர சுய பச்சாதாப எண்ணங்களும் ‘நீ எதற்கும் லாயக்கில்லாதவன்’ போன்ற சுய விமர்சன மாயக்குரல்களும் இவர்களுக்குக் கேட்கலாம். இதற்கும் Schizophrenia எனும் மனச்சிதைவிற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன, குழம்பிக் கொள்ள வேண்டாம். இந்த வகை மனஅழுத்திற்கு பிரத்யேக மருந்துகளும் ECT எனும் மின் அலை சிகிச்சையும் கைகொடுக்கலாம்.

Depression with Catatonia: இது மேல் சொன்ன தீவிர மனஅழுத்தம் போல் தான். சிலை போல் உறைந்து போய் இருப்பர். சாப்பிடாமலும் நீர் அருந்தாமலும் நிலைக் குத்திய பார்வையோடும் ஒரே இடத்தில் மணிக் கணக்கில் அப்படியே இருப்பர். இவர்களைக்கும் மிகச் சிறந்த சிகிச்சை ECT எனும் மின் அலை சிகிச்சை தான்.

Post psychotic depression: மனச் சிதைவு போன்ற நோய் வந்து மீண்டவர்களுக்கு, மீண்டு வந்த பிறகு ஏற்படும் மனஅழுத்தம். மிக கவனமாக இருக்க வேண்டும். வெகு சில பேருக்கு தீவிர தற்கொலை எண்ணங்கள் தோன்றலாம்.

Organic depression: அதாவது உடல் உபாதைகளால் ஏற்படும் மனஅழுத்தம். தைராய்ட் குறைபாடு, இரத்த சோகை, விட்டமின் டீ குறைபாடு, நாற்பட்ட உடல் உபாதை, மூளையில் கட்டி, “ஹார்ட்’ ட்டாக் வந்த பிறகு, பக்கவாதம் வந்த பிறகு போன்ற காரணங்களாலும் ஸ்ட்ராய்ட் போன்ற மருந்துகளை உபயோகிப்பதாலும் ஏற்படும் மனஅழுத்தம். உடல் உபாதையை சரி செய்தால் மனஅழுத்தம் போயிடுமே! அதனால் தான் முதன்முறை பேசாகும் போது மருத்துவர்கள் சில டெஸ்ட்கள் செய்கிறார்கள், உங்களிடம் துட்டுப் பறிப்பதற்கல்ல!


மருத்துவர் ரைஸ்

“ஆமா, பேரு வச்சியே சோறு வச்சியா?” என்பது போல் இத்தனை வகைகளாகப் பிரித்து என்ன பயன்? என நீங்கள் கேட்கலாம். வகைக்கு ஏற்றார் போல் சிகிச்சையும் வேறுபடுவது தான் பிரிப்பதன் காரணம்.




PARISH PATIENCE IMMIGRATION LAWYERS (FOUNDED 1888)

IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST

MIA Migration Institute of Australia

Our large legal team provides a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates

Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au





Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au



Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au



Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au

Non - Immigration Matters

- Family Law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial & Business Law

Our professional provide expert assisstance with:

- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters

Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234

Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au

MoneyQuest FINANCE SPECIALISTS


Money Quest Endeavour Hills is here to help you!

No matter what type of property you're looking for, the professional team at MoneyQuest Endeavour Hills can help you find the right home loan.

As loan experts, you can rely on MoneyQuest Endeavour Hills to have your best interests at heart. With experience and integrity, we guide you towards products that suit your needs.

We can help with:

- Home Loans
- Refinance Loans
- Investment Loans
- Construction Loans
- Car and Vehicle Loans
- Debt Consolidation



Nathan Sivakanthan

உங்கள் தேவைகள் குறித்து தமிழில் உரையாட தொடர்பு கொள்ளுங்கள்

Call us on 0404 053 746 or email
nathan.sivakanthan@moneyquest.com.au

Sivayoganathan Sivakanthan is a Credit Representative (No. 535478) of Money Quest Australia Pty Ltd, Australian Credit Licence 487823.

Visit our website!

CEYLON EXPRESS

MONEY TRANSFER

- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

## ஊழிக்காலம்-2

31



# புயலுக்குப்பின்...

பார்வதியின்’ பகுதிக்கான பொருட்களை சரிவரத்தருவதில்லை. இதைப்பற்றி விசாரித்தபோது கோப்ரல் தர ராணுவத்தான் ஒருவன் பார்வதியிடம்,

“ நீங்க மேலிடத்துக்கு எழுதுங்கம்மா! எங்களுக்கு சரியான தொல்லை என்று” பார்வதி அமைதியாகக் கேட்டுவிட்டு “சரி எழுதிறன்” என்றாள். இப்படி பேசிக் கொண்டிருக்கும்போதே ஒருவன் “அம்மா அந்த பெரச்சனைக்கான பிள்ள ஆர்?” என்றான்.

“ பேரக்கேக்க வேணாம் தம்பி அவங்க சின்னப்பிள்ளையள். இங்க அவயள எச்சரிக்க யாருமில்லை. ஆனா ‘மகிந்த சிந்தன’ பற்றி அடிக்கடி கதைக்கிற உங்களுக்கு தெரியும். அதை கவனமா கடைப்பிடிக்க ராணுவம் முயலுது. முந்திக்காலத்தில, ராணுவம் எப்பிடி இருந்ததெண்டு எனக்குத் தெரியும். இப்ப ராணுவம் நேர்மாறா நடந்துகொண்டிருக்குது. அதுக்கு நாங்கள் ராஜபக்ஸவுக்குத்தான் நன்றி சொல்லோணும். இஞ்ச பிழை நடந்தா அது அரசுக்கு செய்யிற துரோகம்.”

“அப்பிடி பிழை வரும் எண்டு நினைக்கிறீங்களா?”

“ ஒரு ஆண் பல பெண்களை பலதரம் சந்திக்கிறதில பிரச்சனையில்லை . ஆனா ஒரு ஆண் ஒரே பெண்ணை பலதடவை சந்திச்சா!.”

“அம்மா நீங்க சரி”

“சரி சரி எனக்கு வேலை கிடக்கு நான் வரட்டா?” என்றபடி புறப்பட்டாள் பார்வதி.

“அம்மா எழுதுங்க” என்றான் பின்னாலிருந்து ஒருவன்.

மாலையில் பார்வதி தியானத்தில் அமர்ந்தாள். மன அமைதிக்காக அவள் அடிக்கடி தியானம் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டாள். அவள் தியானத்திலிருந்து மீண்டபோது வாசலில் சந்திரா உட்கார்ந்திருந்தாள்.

“என்ன சந்திரா கூப்பிட்டிருக்கலாமே கனநேரமா வந்து”


“இல்ல இப்பதான் வந்தன் ..” என்றவள் சற்று தாமதித்து, “மம்மீ நீங்க என்ன செய்யப்போறீங்க எழுதப்போறீங்களா?”

“ இல்லப்பிள்ளை எப்பிடிப்பாத்தாலும் நாங்க கைதியள்தானே. இருக்கிறவரைக்கும் ஆரையும் பகைக்காமல் காலத்தை ஓட்ட வேண்டியதுதான். வந்த புதிசில ரெண்டு மரக்கறியும் பற்றாக்குறை தேங்காயுமா வாழ்க்கை நடத்தின நாங்கதானே அப்பிடிப் பாத்தா இப்ப பரவாயில்லை. அவங்களுக்கும் பொறுப்பாளரைப் பிடிக்கேல்ல. தங்கட நலனுக்கு என்னை வைச்சு காரியம் பண்ணப் பாக்கிறாங்கள்.”

“ஓம் மம்மீ நானும் அதைத்தான் நினைச்சன் நீங்கள் எங்க எழுதப்போறீங்களோ எண்டு நினைச்சுத்தான்.” பார்வதி புன்ன

இங்கே ஆயிரம் பெண்களும் பவுசர் சுமந்து வரும் நீரில் நீராடி மலசலங்கழித்து, ஆடைகள், போர்வை, படுக்கைகள் துவைத்து, மாதாந்த சுகயீனம், கைகால் சுத்திகரிப்பு, என எல்லாவற்றுக்கும் அதுதான். சமையலுக்கே பெருமளவு நீர் போய்விடும். சிலருக்கு சில நாட்களில் குடிதண்ணீரே பஞ்சமாகிவிடும். இந்த இருபது லீட்டர் தண்ணீர் எப்போதும் கிடைப்பதில்லை. இடை வளவில் இருந்த குழாய்க்கிணறு பாவப்பட்ட ஜென்மமாக பகல்முழுதும் உதைபட்டது. என்றாலும் அங்கு காது கொடுத்துக் கேட்க முடியாத அளவுக்கு சண்டை நடக்கும். சினிமாக்களிலே பார்த்த குழாயடிச்சண்டைபோல அவ்வளவு விறுவிறுப்பாக இருக்கும். முறைக்கு ஒரு தண்ணீர்த் தொட்டிகூட கிடையாது.

அடிப்படைத் தேவைக்கான தண்ணீர் தட்டுப்பாடு. பெண்களை தண்ணீர்ப் போத்தல்களுடனும் வாளிகளுடனும் அலைய வைத்தது. நீண்ட வரிசையில் மணிக்கணக்கில் காத்து நின்றும், தண்ணீர் கிடைக்காமல் போனால் அவர்கள் படும்பாடு சொல்லுந்தரமன்று. இதனால் வீடுகளிலிருந்து பெரிய பெரிய வாளிகளைத்தருவித்து, அவற்றில் தண்ணீரை சேகரித்து மூடி வைத்தனர். குளிப்பது என்ற பெயரில் கழுவலே நடைபெற்றது. பெரும்பாலும் ‘கேபிக்ஸ்’ எனப்படும் சொறி நோய் பரவ ஆரம்பித்தது. மருந்துகளை கவனித்து வழங்கியதுடன் அவர்களைத் தனிமைப்படுத்தியும் வைக்க வேண்டியதாயிற்று. ஒரு கணிசமான தொகை சொறிந்து கொண்டு திரிந்தது. இந்த முகாம்களில் ஒரு வேடிக்கையான கதை உலவியது.



“இங்கே பிள்ளைகள் யாராவது இறந்து போனால், எட்டு அந்தியேட்டி என்று பெரிதாக சமையலெல்லாம் செய்து படைக்க வேண்டாம். ரெண்டு வாளி தண்ணீர் வைத்துப் படைத்தாலே போதும். அவர்கள் ஆன்மா சாந்தியடைந்து விடும்,”

இந்த தண்ணீர் பிரச்சனை என்பது தலைமை தாங்குபவர்களுக்கும் அவர்களது வால்பிடி அல்லக்கைகளுக்கும் மட்டும் பிரச்சனையற்ற ஒன்று. ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் பல வால்பிடி கால்பிடிகள் இருக்கும். இவர்கள் மாலையில் எல்லோரும் ரீவீக் கொட்டிலுக்குப் போனதும். தமக்கென போதிய நீரை கடத்தி சேமித்து வைப்பார்கள். இப்படி அவர்கள் வாளிகளில் தண்ணீர் கடத்துவதை சில பெண்கள் கண்டுவிட்டனர். உடனே போராட்டத்தை ஆரம்பித்தனர்.

“எங்களுக்கு தரவேண்டிய பங்கைத்தா! உன்ர ஆக்களுக்கு கொடுத்த மாதிரி எங்களுக்கும் தா” என்று கோசம் போட்டவர்களை பொறுப்பானவள் அதட்டியே அடக்கினாள். இவர்களில் ஒருத்தி அந்த ராங்கியின் பூட்டை தற்செயலாக உடைந்தது போல உடைத்துவிட்டாள். தண்ணீர் தாராளமாக வந்தது. ஆ ஊவென ஆர்ப்பாட்டம் வலுத்தது. ஆயினும் தொலைக்காட்சித் தொடரின் வில்லிபோல பொறுப்பானவள் அன்றும் தற்காலிக வெற்றியைத் தட்டிச்சென்றாள்.

பார்வதி அவர்கள் அனைவரிலும் வயதானவள். எனவே அவளுக்கு அவளுடைய வயதைக்கருத்தில் கொண்டு, அவளுடைய தேவைகள் அனைத்தும் குறைவற நிறைவேற்றப் பணித்திருந்தார்கள். எனவே அவளுக்கு தண்ணீர் உணவு வகைகள் எதுவாயினும் தேவையான அளவு கேட்டபடி கிடைத்தது. எனவே அவள் இதில் கலந்து கொள்ளவில்லை. வேடிக்கை பார்ப்பதுடன் நிறுத்திக் கொண்டாள்.

பங்குனி மாதம் கடும் வெப்பம். தரப்பாள் கூரைகளின் கீழ் இருக்க முடியவில்லை. காலையிலேயே மரங்களின் கீழ் இடந்தேட வேண்டியிருந்தது. இந்தக் கூரையின் கீழ் சோடாப்போத்தல்களிலும் பிளாஸ்டிக் வாளிகளிலும் சேர்த்து வைக்கும் குடிநீர் சூடாகிப் போனது. எனவே குழாய்க்கிணற்று நீரையே குடிநீருக்கு நம்ப வேண்டியிருந்தது. அதையும் பகல் பதினொரு மணியுடன் பூட்டிவைக்க உத்தரவிட்டான். புதிய ராணுவ அதிகாரி. ஆம் இதுவரை இருந்த மேஜர் விடுப்பில் போயிருப்பதாக அறிந்தனர்.

நான்கு நாட்களிலேயே அதிகாரி வந்துவிட்டார். களஞ்சியத்தில் நின்று அதிகாரம் பண்ணிய இருவரும் எதிர்பாராத விதமாக பூஸாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலும் அறுபது பெண்கள் அவர்களுடன் பூஸா வுக்கு கொண்டு செல்லப்பட்டனர். எனினும் அதை ஒரு பேறாகவே கருதி பெண்கள் சென்றனர். அவர்களுக்கு தாம் கொண்டு செல்லப்படும் இடம் தெரியாது.

காலையிலே பொறுப்பதிகாரி ஒரு கூட்டம் இருப்பதாக கூறி வெளியே சென்று விட்டான். ஒரு நல்லவனாக எல்லோருடைய மனங்களையும் கவர்ந்தவன், மனிதாபிமானமுள்ளவனாகவும் இருந்தான். பிள்ளைகளின் ஒன்று கூடல் ஒன்றை ஞாயிற்றுக்கிழமைகளில் செய்வதற்கு ஒழுங்கு செய்ததுடன் பிள்ளைகளை அதில் கலை நிகழ்ச்சிகள் செய்ய வேண்டும் எனவும் கட்டளையிட்டான். அதைத்தவிர மாலை வேளைகளில் விளையாட வேண்டும் குடிசைகளில் அடைந்து கிடக்கவேண்டாம் எனவும் கூறினான். இதற்காக பந்துகள் கிரிக்கட் மட்டைகள் போன்றவையும் கொண்டு வந்து தந்தான். ஆயினும் பிள்ளைகள் யாரும் விளையாடவில்லை. காரணம் விளையாடியபின் குளிக்கவோ கைகால் அலம்பவோ தண்ணீருக்கு எங்கே போவது என்ற கவலைதான்.

பொறுப்பதிகாரி இல்லாததால் அன்று காலை அணிகள் வரிசை கட்டியபோது அதை ‘ரோல் கோலிங்’ செய்ய சார்ஜன் வந்தான். அணி சரிபார்த்தபின்,

“இங்கே கட்டியிருக்கிற இலக்கத்தை தகரங்களில் செய்து கட்டுங்க” என்று கூறினான்.

பார்வதி, “தகரம் இல்லையே” என்றாள். இந்த இலக்கத்தகடுகளை வைத்து பத்துநாட்களுக்கு மேலாகிறது. இதுவரை பொறுப்பதிகாரி எதுவும் சொல்லவில்லை. இன்று இவன் பார்வதியை வேண்டுமென்றே வம்புக்கிழுத்தான் என்பது புரிந்தது. அவன் மீண்டும் அந்த இலக்கத்தகடுகள் பற்றிப்பேசினான். பார்வதி அவனை இடைவெட்டி, ஐந்தாம் ஆறாம் எண் லீடர்களிடம்,

“பிள்ளையள் இதை மாத்திப் போடுங்க.”என்றாள். அத்துடன் அவன் விலக,

பார்வதி ‘அணி சீராய் நில்’ என்று சத்தமிட்டாள் அணிகள் விரைந்து நேராகின. நேற்று இதே நேரம் இப்படி பார்வதி கூச்சலிட்டபோது ஏறக்குறைய முப்பது பெண்களை தன்னைச்சுற்றி நிற்க வைத்து ஏதோ பதிவுகளை செய்து கொண்டிருந்தான் இந்த சார்ஜன். பார்வதி தேசிய கீதத்தை பாடச் சொன்னபோது, அன்றைய பாடலுக்கான குழுபாட ஆரம்பித்தது. அவர்கள் முதல் ஈரடிகளைப்பாட, பொறுப்பதிகாரி பின்னால் தூரத்திலிருந்து.

“நிப்பாட்டுங்க நிப்பாட்டுங்க” என்று சத்தமிட்டார். இங்கே பாடல் நின்றது. அதிகாரி நேராக சார்ஜனிடம் போய் அவனை திட்டினார் .,

“இங்க என்னசெய்கிறாய். தேசீயகீதம் பாடுறது தெரியவில்லையா நீ யார்” என்றதோடு “பிள்ளைகளை விடு லைனுக்கு” என்றார்.

இன்றும் அவன் பேசிக்கொண்டிருக்க, நேரம் எட்டு ஐந்தாகியதால், பார்வதி அணியை நிலைநிறுத்த வேண்டியதாகி விட்டது. அனைத்து இடங்களிலும் எட்டுமணிக்கே தேசிய கீதம் ஒலிக்கவேண்டும் என்பது, மேலதிகாரிகளின் கட்டளையாக இருந்தது.

# மாதராசிபலன்



## மேடம்

புத்தி சாதூரியத்துடன் காரியங்களை செய்து மற்றவர்களின் பாராட்டை பெறும் மேஷ ராசியினரே இந்த மாதம் எதிர்பார்த்த பணம் வரலாம். எதிர்ப்புகள் விலகும். எந்த காரியம் செய்தாலும் தாமதம் உண்டாகும். எல்லாவற்றிலும் ஒரு பயம் ஏற்படும். புதியநபர்களின் நட்பு உண்டாகும். வீடு வாகனம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்தில் இருப்பவர்களால் நிம்மதி குறைவு உண்டாகலாம். கலைத்துறையினருக்கு தேவையான பொருள்களை வாங்குவீர்கள். நீண்ட நாட்களாக செய்ய நினைத்த ஒரு காரியத்தை செய்து முடிப்பீர்கள். அரசியல்துறையினருக்கு வீண் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை அதிகரிக்கும்.

## இடபம்

எல்லோரிடமும் அனுசரித்து பேசும் குணமுடைய ரிஷபராசியினரே இந்த மாதம் பேச்சின் இனிமை சாதூர்யத்தின் மூலம் காரிய வெற்றி காண்பீர்கள். பணவரத்து கூடும். சாமர்த்தியமான செயல்களால் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். போட்டிகள் விலகும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை அனுசரித்து செல்வார்கள். கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

## மிதுனம்

நேரத்திற்கு ஏற்றாற்போல் குணத்தை மாற்றிக்கொண்டு சாமர்த்தியமாக செயல்படும் மிதுன ராசியினரே, இந்த மாதம் எதிலும் கவனமாக இருப்பது நல்லது. ஏதேனும் மனகஷ்டம் உண்டாகும். வீண்செலவு ஏற்படும். உடல்சோர்வு வரலாம். குடும்பத்தில் நிம்மதி குறையும் படியான சூழ்நிலை வரலாம். கணவன், மனைவிக்கிடையே விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். சொத்து மனை சம்பந்தமான காரியங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். அரசியல்துறையினருக்கு வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் அக்கறை தேவை.

## கடகம்

உயர்வு, தாழ்வு என்று எதைப் பற்றியும் கவலைப்படாமல் எடுத்த காரியத்தை முடிப்பதே குறிக்கோளாக உடைய கடக ராசியினரே, இந்த மாதம் பணவரத்து இருக்கும். மனகவலை நீங்கும். எடுத்த காரியத்தை திருப்தியுடன் செய்து முடிப்பீர்கள். சாமர்த்தியமான பேச்சு இக்கட்டான நேரங்களில் கைகொடுக்கும். எதிலும் கவனம் தேவை. புதிய நண்பர்களின் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். குடும்பத்தில் குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். அரசியல்துறையினருக்கு மேலிடம் நீங்கள் சொல்வதை கேட்டு நடக்கவில்லையே என்ற எண்ணம் ஏற்பட்டு நீங்கும்.

## சிம்மம்

தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் உடைய சிம்ம ராசியினரே இந்த மாதம் பணதேவை அதிகரிக்கும். வீண்செலவு மன அமைதி பாதித்தல் ஆகியவை இருக்கும். காரிய தாமதம், உடல் சோர்வு, வீண்பகை போன்றவை ஏற்படலாம் உங்களை கண்டு அடுத்தவர் பொறாமை படக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களுக்காக அலைய வேண்டி இருக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. அரசியல்துறையினருக்கு நினைக்கும் காரியங்கள் தள்ளிபோகலாம். வீண் அலைச்சல் வேலைப்பளு இருக்கும். மாணவர்களுக்கு பாடங்களை மிகவும் கவனமாக படிப்பது கூடுதல் மதிப்பெண் பெற உதவும்.

## கன்னி

தர்மகுணமும், இரக்க சிந்தனையும் உடைய கன்னி ராசியினரே, இந்த மாதம் எல்லாவற்றிலும் லாபம் கிடைக்கும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் நன்மதிப்பு பெறுவீர்கள். உங்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே சுமுக உறவு இருக்கும். கலைத்துறையினருக்கு பேச்சு திறமையால் காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். பயணங்கள் செல்ல நேரலாம்.

## துலாம்

ஆடை ஆபரணத்தையும் அலங்காரத்தையும் விரும்பும் துலாராசியினரே, இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலுடன் செயல் பட்டு எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பணவரத்து இருக்கும். இடமாற்றம்,வெளியூர் பயணங்கள், அலைச்சல் ஆகியவை இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். அரசு தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கஷ்டமான பாடங்களையும் மனம் துவளாமல் படிப்பீர்கள்.

## விருச்சிகம்

சோர்வில்லாமல் எப்போதும் உற்சாகமாக காணப்படும் விருச்சிக ராசியினரே, இந்த மாதம் உல்லாச பயணங்கள் செல்ல நேரலாம். நற்பெயரும் புகழும் உண்டாகும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு இருக்கும். வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்களை சந்திக்க நேரலாம். எப்படிப்பட்ட பிரச்சனை வந்தாலும் சமாளித்துவிடும் திறமை இருக்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வியாபார வளர்ச்சிக்காக துணிச்சலுடன் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். குடும்பத்தில் கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு யாரையும் பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது.

## தனுசு

எந்த ஒரு காரியத்திலும் லாப நஷ்டம் பார்க்கும் குணமுடைய தனுசு ராசியினரே, இந்த மாதம் விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடக்கலாம். சந்திரன் சஞ்சாரத்தால் மனகுழப்பம் உண்டாகலாம். பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்தபடி பழைய பாக்கிகள் வசூலாகும். கலைத்துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அரசியல்துறையினருக்கு பயணங்களால் மகிழ்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். மாணவர்களுக்கு யாரிடமும் வாக்குவாதம் செய்யாமல் அனுசரித்து செல்வது நல்லது.

## மகரம்

திடபுத்தியும், பலவழிகளில் உழைத்து சம்பாதிக்கும் திறமையும் கொண்ட மகரராசியினரே, இந்த மாதம் பணவரத்து எதிர்பார்த்ததை விட கூடுதலாக வரும். பேச்சின் இனிமை சாதூர்யத்தால் எடுத்த காரியத்தை திறம்பட செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சிறு தடங்கல்கள் உண்டாகலாம். கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும். அரசியல் துறையினருக்கு நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சனைகள் விலகும். திடீர்ச் செலவுகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றமடைய கூடுதலாக நேரம் எடுத்துக்கொண்டு கவனத்தை சிதற விடாமல் படிப்பது அவசியம்.

## கும்பம்

இருதரப்பு வாதங்களையும் கேட்டு அதன்பிறகே நியாயத்தை சொல்லும் குணமுடைய கும்பராசியினரே, இந்த மாதம் எதிர்ப்புகள் நீங்கும். சந்திரன் சஞ்சாரம் நோய்களை நீக்கி உடல் ஆரோக்கியத்தை தரும். பணவரத்து எதிர்பார்த்ததை விட அதிகரிப்பது மனமகிழ்ச்சியை தரும். எதிரிகளால் இருந்து வந்த பிரச்சனை தீரும். நண்பர்கள் மூலம் தேவையான உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பயணங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். கணவன், மனைவிக் கிடையில் மகிழ்ச்சி நீடிக்கும். அரசியல் துறையினருக்கு உறுதியும், துணிவும் நிறைந்திருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை வெளிப்படும்

## மீனம்

பிரச்சனை என்று வரும் போது அதில் சிக்காமல் சாமர்த்தியமாக நழுவும் திறமை உடைய மீனராசியினரே,இந்த மாதம் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் போது தீர ஆலோசித்தபின் முடிவு எடுப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள், சக ஊழியர்களின் கருத்துக்கு மாற்று கருத்து சொல்லாமல் இருப்பது நன்மை தரும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கருத்து மோதல் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த பூசல்கள் சரியாகும். கலைத்துறையினருக்கு வெளிநாடு வாய்ப்புகள் தேடி வரும். அரசியல் துறையினருக்கு உங்கள் கடமைகளைச் சரிவர செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும்.


NS Systems SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au




| MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| January | 2022-01-08 | 2022-02-15 |
| January | 2022-01-15* | 2022-02-22 |
| January | 2022-01-22 | 2022-03-01 |
| January | 2022-01-29* | 2022-03-08 |
| February | 2022-02-05 | 2022-03-15 |
| February | 2022-02-12* | 2022-03-22 |
| February | 2022-02-19 | 2022-03-29 |
| February | 2022-02-26* | 2022-04-05 |
| March | 2022-03-05 | 2022-04-12 |
| March | 2022-03-12* | 2022-04-19 |
| March | 2022-03-19 | 2022-04-26 |
| March | 2022-03-26* | 2022-05-03 |
| April | 2022-04-02 | 2022-05-10 |
| April | 2022-04-09* | 2022-05-17 |
| April | 2022-04-23 | 2022-05-31 |
| April | 2022-04-30* | 2022-06-07 |